மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 23 சனிக்கிழமை (07.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:101

# இரு தரப்புகளும் அனுமதிக்கும் வரை வன்னி மக்களை வெளியேற்ற முடியாது!

## அமெரிக்க தென்னாசிய விவகாரச் செயலாளர் பவுச்சர்



லண்டன், மார்ச்7

இலங்கையில், வன்னிப் பகுதியில் சிக்குண்டுள்ள மக்களை அமெரிக்க பசுபிக் கட்டளை அணியின் உதவியுடன் வெளியேற்றுவதற்கான அனுமதி அளிக்கும் சூழல் வரும் வரை -இரண்டு தரப்புகளும் சம்மதம் தெரிவிக்கும் வரை- அந்தச் செயற்பாட்டில் நாம் ஈடுபட முடியாது. அதேவேளை, அங்குள்ள பொதுமக்களுக்கு எந்தெந்த உதவிகளை எங்களால் செய்ய முடியுமோ அவற்றைச் செய்வதற்கு முயற்சிப்போம்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். தென்னாசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் துணைச் செயலாளர் றிச்சார்ட் பவுச்சர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தகசாலை, அச்சக உரிமையாளர்கள் நேற்று வெள்ளவத்தையில் கைது

பிரபல புத்தகசாலை உரிமையாளர் ஒருவரும், அச்சக உரிமையாளர் ஒருவரும் கல்கிசைப் பொலிஸாரால் நேற்றுக்கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரது நிறுவனங்களும் வெள்ளவத்தையில் இயங்குகின்றன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் படத்துடனான தமிழக சஞ்சிகையை (ஆனந்தவிகடன்) விற்பனை செய்து (16 ஆம் பக்கம் பார்க்க)

## உடனடியாக மோதலை நிறுத்துக; ஐ.நா. செயலர் மீண்டும் அழுத்தம்

கொழும்பு, மார்ச் 7

இலங்கையில் இராணுவ மோதல்கள் காரணமாக அதிக எண்ணிக்கையான பொதுமக்கள் கொல்லப்படுவதை கடுமையாக கண்டித்துள்ள ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் உடனடியாக மோதலை நிறுத்துமாறு கோரியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே பான் கீ-மூனின் இந்த வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.

மோதல் நடைபெறும் பகுதிகளில் உள்ள மக்கள் வெளியேறுவதற்கும் மனிதாபிமான உதவிகள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஏவுகணைகளின் பாவிக்கப்பட்ட வெற்றுக்கூடுகள் புதுக்குடியிருப்பில் மீட்கப்பட்டதாகத் தகவல்

### உதய நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 7

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் தேடுதல் நடத்திய படையினர், ஏவுகணைகளின் பயன்படுத்தப்பட்ட பதின்மூன்று வெற்றுக் கூடுகளைக் கண்டுபிடித்துள்ளனர் - என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக்காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் (16 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னி மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு இரண்டு பாதைகளை அரசாங்கம் அறிவித்துள்ளது

### மக்கள் நலனில் அக்கறை இருந்தால் புலிகள் அனுமதிக்க வேண்டும் எனத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 07

வன்னியில் மோதல்கள் இடம்பெறும் பகுதியில் சிக்கியுள்ள பொதுமக்களை அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு இரு பாதைகள் திறக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. அத்துடன் அப்பாதைகளைப் பயன்படுத்தி மக்களை அங்கிருந்து வெளியேறுமாறும் கேட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சரின் செயலாளர் பாலித கோஹன்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நகரப்பகுதி ஊடாகவும், சாளை கடலோரப்பகுதி ஊடாகவும் இந்தப் பாதைகளை அரசு திறக்கவுள்ளது எனத் தகவல்கள் வெளியானதைத் தொடர்ந்தே அரசின் இந்தக் கோரிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுமாத்தளனில் இருந்து வடமராட்சி நோக்கி வந்த அகதிகள் மீது சூடு; மூவர் பலி!

யாழ்ப்பாணம், மார்ச்7

முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதியில் இருந்து படகுகளில் இடம் பெயர்ந்த மக்கள் மீது நேற்றிரவு 9 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் மூவர் கொல்லப்பட்டனர்.

புதுமாத்தளனிலிருந்து மக்கள் படகுகளில் வடமராட்சியை நோக்கிப் புறப்பட்டனர் என்றும் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களுடன் படகுகள் வடமராட்சிப் பகுதிக்குக் கொண்டு வரப்பட்டன.

இந்தத் தாக்குதலில் சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த மகாலிங்கம் பிரகாஷ் மோகன் (வயது40), பிரகாஷ் மோகன் அனோஜன்(வயது15), (16 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நடைபெறும் பிரதேச மக்களின் அவலங்களை ஐ.நா. சபை உன்னிப்பாக அவதானித்து வருகிறது

### மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை



நியூயோர்க், மார்ச்7

போர் நடைபெற்று வரும் பிரதேசங்களில் பொதுமக்கள் எதிர்நோக்கி வரும் அவலங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் ஏனைய கிளை அமைப்புக்கள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. மனித உரிமைகளுக்கான ஐ.நா ஆணை யாளர் நவநீதம்பிள்ளை இவ்வாறு தெரி வித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் தனது முதலாவது அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கம் பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பில் வழங்கியுள்ள உத்தரவாதத்தை வரவேற்கிறோம். யுத்தத்தில் ஈடுபட்டு வரும் சகல தரப்பினரும் பொதுமக்களின் பாதுகாப்பை முதன்நிலைப்படுத்தி செயற்பட வேண்டும்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புதன், வியாழக்கிழமைகளில் 83 பேர் பலி! நள்ளிரவு, அதிகாலை வேளைகளில் தொடர் ஷெல் தாக்கு!!

கொழும்பு, மார்ச்7

புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, முள்ளிவாய்க்கால், மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய பகுதிகளில் புதன், வியாழக்கிழமை ஆகிய இரண்டு நாள்களிலும் ஷெல் மற்றும் வீரங்கித் தாக்குதல்களில் 83 பேர் கொல்லப்பட்டனர்; 226 பேர் காயமடைந்தனர்.

இத்தகவல்களை இணையத்தளங்கள் நேற்று வெளியிட்டிருந்தன.

இணையத்தளங்கள் இச்சம்பவங்கள் குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால், (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எமக்குப் பாதுகாப்புக் கவசங்களாக விளங்கி நட்புறவுடன் செயற்பட்டனர் யாழ். மக்கள்

## 1 ¼ வருடம் இங்கு பணியாற்றிய டாக்டர்கள் கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாகப் பணியாற்றிய எமக்கு பாதுகாப்புக் கவசங்களாக குடாநாட்டு மக்கள் இருந்தனர். அவர்கள் எமக்குத் தந்த ஒத்துழைப்புக்கு நன்றி கூறுகின்றோம்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சி வைத்தியர்களாகப் பணியாற்றிய பின்னர் தெற்கு வைத்தியசாலைகளுக்கு நியமனம் பெற்றுச் செல்லும் சிங்கள வைத்தியர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஒரு வருடமும் 4 மாதங்களும் பணியாற்றிய உள்ளகப் பயிற்சி வைத்தியர்கள் 18 பேர் தென்னிலங்கை,வைத்தியசாலைகளுக்கு நியமனம் பெற்று நேற்றுக் கொழும்புக்கு பயணமானார்கள்.

கொழும்பு செல்வதற்கு முன்னர் யாழ்.வைத்தியசாலை பொது மருத்துவர் சங்கத்தின் யாழ்.கிளை உதவிச் செயலாளர் வி.ஜே. ஹேரத், தெற்கே செல்லும் வைத்தியர்கள்சார்பாகமேற்கண்டவாறு 'உதயனு'க்குக் கருத்துத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நியமனம் பெற்ற 21 சிங்கள வைத்தியர்களில் 18 பேருக்கு தெற்கு வைத்தியசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அடுத்த மூவரும் யாழ்.ஆஸ்பத்திரியில் தொடர்ந்து பணிபுரிவர்.

யாழ்ப்பாணத்தில் தென்னிலங்கை வைத்தியர்கள் பணிபுரிவதற்கு எதிராக பல்வேறு பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் இங்கு வந்து நாம் பணியாற்றினோம்.

நாங்கள் சேவையாற்றிய காலப்பகுதியில் எமக்கு குடாநாட்டு மக்களே பாதுகாப்புக் கவசங்களாக இருந்தனர். அவர்கள் எம்முடன் நல்ல நட்புறவுடனும் புரிந்துணர்வுடனும் செயற்பட்டதால் எம்மால் சிறப்பாக சேவையாற்ற முடிந்தது. மக்கள் எம்முடன் வேறுபாடு எதுவும் இன்றி பழகினர். அவர்களுடன் நட்புறவுடன் நாங்களும் செயற்பட்டோம்.

குடாநாட்டு மக்களும் யாழ்.வைத்தியசாலை வைத்தியர்கள், ஊழியர்கள் ஆகியோரும் எம்முடன் அன்புடன் பழகினர். - என்றார்.

புதிதாக நியமனம் பெற்றுள்ள ஆறு சிங்கள வைத்தியர்கள் ஓரிரு தினங்களில் யாழ்ப்பாணம் வந்து தமது கடமையை பொறுப்பேற்கவிருக்கின்றனர்.

அதேவேளை-

குடாநாட்டில் சுகாதாரத் திணைக்களத்துக்குக் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் பணிபுரியும் சிங்கள வைத்தியர்கள் தொடர்ந்து பணிபுரிவர் என்றும்-

புதிதாக நியமனம் பெற்றவர்கள் வந்த பின்னரே இவர்கள் தெற்கே செல்வர் என்றும்- சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ-1)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



சேவையில் இருந்து ஓய்வு பெற்று நேற்று 06.03.2009 வெள்ளிக்கிழமை தனது 60 ஆவது அகவையைப் பூர்த்திசெய்த சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி

உயர்திரு நா.சத்தியநாதன்
(B.A., L.L.B, Dip. in Edu, PEDE.M, M.Ed )

அவர்கள் எமது சாவகச்சேரி கோட்டத்திற்கு மட்டுமன்றி தென்மராட்சி வலயத்தின் கல்வி உயர்விற்கு பன்னெடுங்காலம் பல்லாற்றலாலும் அரும்பணி ஆற்றியுள்ளார். இவருக்கு எமது மணிவிழா வாழ்த்துக்களையும் பிறந்ததின வாழ்த்துக்களையும் தெரிவிப்பதுடன் இவர் தன் ஓய்வு காலத்தில் குடும்பத்தினரோடு சகல நன்மைகளும் பெற்று நீடூழி வாழ இறை ஆசியைவேண்டி வாழ்த்துகின்றோம்.

கோட்டக்கல்வி அலுவலகம், சாவகச்சேரி.

கோட்டக்கல்வி அலுவலகம் உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.


# சமுர்த்தி பயனாளிகளுக்கு மூன்று மாத நிவாரண விநியோகம் ஆரம்பம்

சமுர்த்தி பயனாளிகளுக்கான ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக்கான உணவு விநியோகம் ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இதுவரை 1015 ரூபா பெறுமதியுள்ள முத்திரைகளைப் பெற்ற பயனாளிகளுக்கு 50 சதவீத அதிகரிப்புடன் கூடிய 1500 ரூபா பெறுமதியான முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன என அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருள்களை கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கு வழங்கப்படும் கிலோ ஒன்றிற்கான கப்பல் கட்டண கூலி 7/= மாவட்ட செயலகத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ளதால், சமுர்த்திப் பயனாளிகளின் பொருள்கள் வழமையைவிட குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன என்று அரச அதிபர் தெரிவித்தார்.

அட்டவணையில் குறிப்பிட்ட அளவு பிரமாணத் தில் மூன்று மாதத்திற்குரிய உணவுப் பொருள்கள் சேர்த்து வழங் கப்பட வுள்ளன. உணவுப் பொருள் விநியோகத்திற்கான விநி யோகப் பட்டியல் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.


பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (07.03.2009) சனிக்கிழமை ஓய்வுபெற்றுச் செல்லும் எமது சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி

உயர்திரு
நா.சத்தியநாதன்

அவர்கள் தன் ஓய்வுகாலத்தைச் சிறப்பாகக் கழித்து நீடூழி காலம் வாழ்கவென மனதார வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி.


# புதுமாத்தளனில் காயமடைந்த மூவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 07

முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதியில் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒரு வயதுக் குழந்தை உட்பட மூவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புதுமாத்தளன் பகுதியிலிருந்து வயிற்றில் காயமடைந்த நிலையில் மிருசுவில் நலன்புரி முகாமுக்கு அழைத்துவரப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த சூசை தேவராசா ஜெனிஸ்ரன் (வயது 20) என்பவர் அங்கிருந்து நேற்று முன்தினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று புதுமாத்தளன் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயங்களுடன் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த யோ.மேரி குயின்ரா (வயது 37), அவரது மகனான ஜே.நியூட்டன் (வயது 1) ஆகியோர் மேலதிக சிகிச்சைக்காக நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

(50-202-78)

## உதைபந்தாட்டம்

வண்ணை, மார்ச் 7

யாழ். மக்கள் வசந்த எழுச்சிப் பேரவை நடத்தும் மாபெரும் விளையாட்டுப் போட்டிகளில் ஓர் அங்கமாக உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்றும் நாளையும் நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:

* இன்று மாலை 4மணிக்கு யூனியன் வி.க எதிர் சென் மைக்கல் வி.க.
* நாளை மாலை 4மணிக்கு ஊர்காவற்றுறை தம்பாட்டி வி.க எதிர் சென் அன்ரனீஸ் வி.க.

(1-160)

### அதிகாரி, பாதுகாப்பு ஊழியர் கடத்தப்பட்டதைக் கண்டித்து

# வவுனியா வங்கிக் கிளைகளின் பணியாளர்கள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம்

கொழும்பு, மார்ச் 7

இலங்கை வங்கியின் வவுனியா கிளையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரியும் வங்கியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரும் கடந்த புதன்கிழமை கடத்தப்பட்டதைக் கண்டித்து வவுனியாவில் உள்ள வங்கிக் கிளைகளைச் சேர்ந்த பணியாளர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

செவ்வாய்க்கிழமை மாலை வவுனியா நகரில் வைத்துக் கடத்தப்பட்ட இருவரும் புதன்கிழமை இரவு விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக தெரியவருவதாவது

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வவுனியாவில் உள்ள இந்த வங்கிக் கிளைகளுக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அதிகாரி ஒருவரை அழைத்த இனந்தெரியாத ஆயுததாரிகள் அவருடன் சென்ற பாதுகாப்பு ஊழியரையும் கடத்திச் சென்றுள்ளனர்.

இருவரையும் விடுதலை செய்ய பெருந்தொகைப் பணத்தையும் கப்பமாக கோரியிருந்தனர்.

இருவரும் புதன்கிழமை இரவு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் கடத்தல் மற்றும் கப்பம் கோரியதையடுத்து வங்கிப் பணியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

(203)

## தீவக ஆசிரியர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம்,மார்ச்7

தீவக வலயப் பாடசாலைகளின் கணித பாட ஆசிரியர்களுக்கான பரீட்சைக்கும், கணிப்பீட்டுக்குமான வழிகாட்டல் செயலமர்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமையும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமையும் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடைபெறும் என தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(6-267)


தேவை

★ கணக்கு பதிவுகள் செய்யக் கூடியவர் (பெண்)
★ சிற்றூழியர் ஒருவர் (ஓய்வுபெற்றவரும் வரலாம்)

10.03.2009 இற்கு முன் நேரில் வரவும்

பரணி தொழில்நுட்ப சேவை
166, நாவலர்வீதி யாழ். T.P. 222 7442

PENTIUM 4 COMPUTERS

1
Intel Mobile Processor
Intel Mother Board
80GB Sata Harddisk
512MB DDRII Ram
CD Writer
15" LCD Monitor
ATX Black Casing
KeyBoard
Optical Mouse
37,000/=
Free: 1GB Pendrive Duestcover Mousepad

2
Intel 1.8Ghz Dualcore
Foxconn Motherboard
80GB Sata Harddisk
1GB DDRII Ram
LG Dvd Writer
17" LCD Monitor
ATX Black Casing
KeyBoard
OpticalMouse
45,000/=
Free: 1GB Pendrive Duestcover Mousepad

3
Intel 2.2Ghz Dualcore
Foxconn Motherboard
160GB Sata Harddisk
1GB DDRII Ram
Samsung DvdWriter
17" LCD Monitor
ATX HandleCasing
Keyboard
Optical Mouse
UPS 650W
53,000/=
Free: 2GB Pendrive Duestcover Mousepad

4
Intel 2.2Ghz Dualcore
Intel DG31 Motherboard
160GB Sata Hartdisk
1GB DDRII Ram
Samsung DvdWriter
19" LCD Monitor
ATX HandleCasing
Keyboard
Optical Mouse
UPS 650W
57,500/=
Free: 2GB Pendrive Duestcover Mousepad

5
Intel 2.2Ghz Dualcore
Intel DG31 Motherboard
250GB Sata Harddisk
2GB DDRII Ram
Sony Dvd Writer
19" LCD Monitor
ATX Handle Casing
Keyboard
Optical Mouse
UPS 650W
61,000/=
Free: 4GB Pendrive Duestcover Mousepad

6
Intel 2.8Ghz Core2Duo
Intel DG31 Motherboard
250GB Sata Harddisk
2GB DDRII Ram
Sony Dvd Writer
19" LCD Monitor
ATX Candle Casing
Keyboard
Optical Mouse
UPS 650W
67,500/=
Free: 4GB Pendrive Duestcover Mousepad

1-2 Years Warrenty
Vaild For One Week

MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# அவதானித்துக் கொண்டிருந்தால் மட்டும் மக்களைக் காப்பாற்ற முடியுமா?

வன்னியில்-முல்லைத்தீவில்-பெரும் மனிதாபிமானப் பேரழிவு கட்டவிழும் பயங்கரமான நிலை உருவாகி வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரி கோர்டன் வைஸூம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரி ஜக்குவாஸ் டி மையோவும் அபாய அறிவிப்பு விடுத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டமும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் மட்டுமே இப்போது வன்னி மக்களுக்கு உதவும் சர்வதேச அமைப்புகள். ஆகையால் அவற்றின் அதிகாரிகள் தரும் தகவல்கள் உண்மையானவை, சரியான மதிப்பீடு என்று கொள்ளத்தக்கவை.

மிகக்குறுகிய நிலப்பரப்பில் சிக்குண்டுள்ள லட்சக் கணக்கான மக்கள் உணவு, தண்ணீர், தங்குமிடம் ஆகிய இன்றியமையாத வசதிகளே இன்றி அவலப்படுகிறார்கள். தேவைப்படும் உடனடி - உரிய - மருத்துவ வசதிகளும் மருந்து வகைகளும் இன்றி, குணப்படுத்தக் கூடிய நோய்களுக்குக் கூட சிகிச்சை இன்றி உயிரிழக்கும் சம்பவங்கள் அங்கு நிகழ்ந்துள்ளன. அவ்வாறு உயிரிழந்தவர்களில் சிறுவர்களும் அடங்குகின்றனர்.

கற்பனையும் செய்து பார்க்க முடியாத மிகுந்த பேரவலத்தில் சிக்குண்டுள்ள மக்களைக் காப்பாற்றுவதற்கு இதுவரை அரசாங்கம் உருப்படியான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. மக்கள் பாதுகாப்பு வலயம் என்ற ஒரு பகுதியை அறிவித்திருந்த போதிலும், அங்கும் ஷெல்கள் வீழ்கின்றன; விமானங்கள் குண்டு வீச்சு நடத்துகின்றன. போதிய அடிப்படை வசதிகள் திருப்தி கரமாகச் செய்யப்பட்டதாக சுயேச்சையான தகவல்கள் இல்லை.

சர்வதேச அமைப்புகளும் இது விடயத்தில் எதுவும் செய்யமுடியாத நிலையில் கைகட்டப்பட்ட நிலையில் வெறுமனே கவலை தெரிவிப்பதோடு நின்று விடுகின்றன.

இது ஒரு பெரும் மனிதாபிமானப் பேரவலம், பயங்கரமானது என்று கூறப்பட்டாலும், அதற்கு முன்னுரிமை கொடுத்து மக்களின் அவலத்தை நீக்குவதில் எவரும், எந்த அமைப்பும் உணர்வு பூர்வமாகச் செயற்படுவதாக இல்லை எனலாம்.

வன்னியின் மனிதாபிமான விவகாரம் குறித்து வியாழக்கிழமை-நேற்று முன்தினம் - கருத்து வெளியிட்டுள்ள ஐ.நா.மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்திருக்கும் நிலைப்பாடு முல்லைத்தீவில் முடங்கிப்போய் பேரவலமுறும் மக்களைச் சர்வதேசம் காப்பாற்றாது என்ற எண்ணத்தையே தோற்றுவிக்கிறது!

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் நேற்றுமுன்தினம் தமது அறிக்கையைச் சமர்ப்பித் துப் பேசிய மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளை-

ஐக்கிய நாடுகள் சபையும் அதன் கிளை அமைப்புகளும் வன்னி நிலைமையை அவதானித்து வருவதாகக் கூறியுள்ளாரே அன்றி மக்களை பேரவலத்திலிருந்து மீட்க ஐ.நா.என்ன செய்யப்போகிறது என்பதனை ஒரு சிறு வடிவிலோ அன்றி சிறு அளவிலோ தானும் தொட்டுக் காட்டவில்லை.

இலங்கையின் போர்ப் பிரதேசத்தில் உள்ள பொது மக்கள் பாதுகாக்கப்பட்டு, அவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசுக்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருவதாகக் கூறியிருக்கிறார். ஐ.நா.வின் நான்கு அமைப்புகள் ஊடாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகவும் மொட்டையாகக் கூறியுள்ளார். அந்த அழுத்தம் முல்லை மக்களின் பேரவலத்தை நீக்க உதவக்கூடியதா என்பதனை விவரிக்கவில்லை.

மனிதப் பேரவலம் மிகப் பயங்கரமான கட்டத்தை எட்டிவிட்ட பின்னரும், உணவின்றி, மருந்தின்றி மக்கள் உயிரிழந்து வரும் நிலையிலும், அவற்றை அவதானித்துக் கொண்டே இருப்பின், ஐ.நா. சாதகமாகவோ, பாதகமாகவோ எந்தச் செயற்பாட்டிலேனும் ஈடுபடுவதற்கு - செயலாற்றுவதற்கு - முன்னர் மக்களில் அரைவாசிப் பேர் மாண்டுவிடக்கூடும்.

மனித உயிர்கள் மதிக்கப்படவேண்டும்; பேணப்படவேண்டும்; காப்பாற்றப்பட வேண்டும் என்ற மனித நேயமும், மனிதாபிமானமும் முல்லைத்தீவு மக்களின் பேரவலத்தை நீக்கி அவர்களின் உயிர்களைக்காக்க உதவவேண்டும். பேரவலத்தைத் தடுத்து பயங்கரத்தை நிறுத்துவதற்கு, உருப்படியான, உடனடியான உதவி தேவை. இதுவிடயத்தில் சர்வதேச மக்கள் பெருமன்றமான ஐக்கியநாடுகள் சபை ஆபத்பாந்தவனாக உடனடிச் செயற்பாட்டில் இறங்கவேண்டும்.

மனிதனின் உயிர்வாழும் உரிமை ஐ.நா.மனித உரிமைப் பிரகடனத்தில் முதன்மையானது. அதனைச் செயற்படுத்துவதில் காட்டப்படும் ஒவ்வொரு வினாடித் தாமதமும் முல்லை மக்களைக் கொல்லாமல் கொல்லும் சூத்திரமாக முடிந்துவிடும்.

முல்லைத்தீவு மக்களைக் காப்பாற்றும் பொறுப்பும் வலுவும் வேறெந்தச் சாராரையும் விட, ஐ.நா. சபைக்கே அதிகம் உண்டு. அதனைச் சொல்லக் கூடிய தகுதியும், அதிகாரமும் அதனிடமே உண்டு. ஓரவஞ்சகம் இன்றி உடன் செயற்படுவதற்கு ஐ.நா. முன்வருமா?

# வித்தியாதரனை உடன் விடுதலை செய்வதன் மூலம் தன் மீது குவியும் கண்டனங்களை அரசு தவிர்க்க முடியும்

## வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 7

உதயனின் ஆசிரியரும் சுடர் ஒளியின் பிரதம ஆசிரியருமான ந.வித்தியாதரனை உடனடியாக விடுதலை செய்வதன் மூலம் அரசு தன் மீது வந்து குவியும் கண்டனங்களைத் தவிர்க்கவும், அதன் மூலம் தனது நற்பெயரையும் நீதியையும் நிலை நாட்டவும் ஒரு சந்தர்ப்பம் வாய்த்துள்ளது.

இவ்வாறு வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வித்தியாதரனின் கைது தொடர்பாக விடுத்துள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

உதயன், சுடரொளி, ஆசிரியர் நடேசபிள்ளை வித்தியாதரன் பொலிஸாரினால் கைது செய்யப்பட் டது எமக்கு பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தி உள்ளது. அவரது கைது ஊடகங்களுக்கு பகிரங்கமாக விடுக்கப்பட்டுள்ள அச் சுறுத்தல் எனக் கருதுகிறோம். ''நாங்கள் தருவதை ஏற்று மக்களுக்கு தீற்று'' என அரசாங்கம் எச்சரிப்பது போல, இவரின் கைது தோன்றுகிறது. வித்தியாதரன் கைது தொடர்பாக மேற்கண்டவாறு குற்றம் இழைத்ததாகக் கருதப்படுவோரை விசாரணை செய்ய நீதிமன்ற நடைமுறைகள் பல உண்டு. அதை விடுத்து ''கிறிமினலைக்'' கைது செய்யும் பாணியில் பலாத்காரமாக இழுத்துக் கொண்டுசென்று வானில் ஏற்றியது எமக்கு அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அவரை பலாத்காரமாக இழுத்துச் செல்லும்போது உதயன் நிர்வாக இயக்குநர் தலையிட்டு ''இவரை எங்கு கொண்டு போகிறீர்கள்'' எனக் கேள்வி எழுப்பி கடும் ஆட்சேபனையைத் தெரிவிக்காமல் இருந்திருந்தால் கதை வேறாக மாறி இருக்கலாம்.

இவரின் கைதை எதிர்த்து ஊடகவியலாளர்கள் மட்டும் அன்றி மனித உரிமை ஆர்வாலர்கள், மக்கள் பிரதிநிகள், வெளிநாட்டு ஊடகங்கள், ஜனநாயக அமைப்புக்கள் கண்டனக் குரல்களை எழுப்பி உள்ளனர். வித்தியாதரன் மீது குற்றமில்லையேல் அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இது போன்ற கைதுகள் எதிர்வரும் காலத்தில் நிகழா வண்ணம் அரசாங்கம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

வித்தியாதரனை உடனடியாக விடுதலை செய்வதன் மூலம் அரசாங்கம் தன்மீது வந்து குவியும் கண்டனங்களைத் தவிர்த்து தனது நற்பெயரையும் நீதியையும் நிலை நாட்ட ஓர் சந்தர்ப்பம் எழுந்துள்ளது. இது அரசாங்கத்திற்கும் ஊடக சுதந்திர ஆர்வலர்களுக்கும் சமர்ப்பணம்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு நவீன வசதிகளுடன் மீன் பதனிடும் தொழிற்சாலை

## ஜி.ரி.இசற் நிறுவனம் அமைத்துக் கொடுக்கும்

யாழ்ப்பாணம்,மார்ச் 7

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய மீனைப் பதனிட்டுப் பொதி செய்யும் தொழிற்சாலை ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்கு ஜி.ரி. இசற் நிறுவனம் முன்வந்துள்ளது.



சங்கத்தின் கேட்போர் கூடத்தில் சங்கத்தின் தலைவர் ப.கிரிதரனை கொழும்பில் இருந்து வருகை தந்துள்ள ஜி.ரி.இசற் நிறுவனப் பிரதிநிதிகள் நேற்றுக் காலை சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

தற்போது சங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் மக்களின் தேவைகள் குறித்தும் சங்கத் தலைவர் ஜி.ரி.இசற் நிறுவன பிரதிநிதிகளுக்கு விளக்கிக் கூறினார்.குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான இளைஞர், யுவதிகள் கல்வி கற்று விட்டு வேலை வாய்ப் பின்றி சிரமப்பட்டு வருகின்றனர். இதனை ஈடுசெய்வதற்கு நகரில் தொழிற்சாலை வசதி ஒன்றை ஏற்படுத்தி பலருக்கு வேலைவாய்ப்பு வசதியை பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

இதனையடுத்து மீனைப் பதனிட்டுப் பொதி செய்யும் தொழிற்சாலை ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்கு ஜி.ரி.இசற் பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளதாகத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார். இதனை விரைவில் அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அந்தக் குழுவினர் கூறியதாக தலைவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஜி.ரி.இசற் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் டாக்டர் டக்மான்லூம், பொருளாதார அபிவிருத்தி வேலை வாய்ப்பு திட்டமிடல் அதிகாரி கெடர்ஜபக்டாடி மற்றும் சங்கத்தின் பொது முகாமையாளர் து.மனோகரன், சமாச பொது முகாமையாளர் வ.பஞ்சாட்சரம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (50-224)

## கப்பல் சேவை இன்று இடம்பெறாது

யாழ்ப்பாணம்,மார்ச் 7

யாழ்.மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்வதற்கான கப்பல் சேவை இன்று சனிக் கிழமை இடம்பெறமாட்டாது என்று யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார்.

இச்சேவை நாளை ஞாயிற்றுக் கிழமை இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.செயலகத்தில் அனுமதிச் சீட்டைப் பெற்றுக் கொண்டோர் அனுமதிச் சீட்டில் குறிப்பிட்ட திகதிக்கு மறுநாள் பிரயாணம் செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

## பட்டமேற்கல்வி விரிவுரைகள்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டமேற்கல்வி மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும் என்று இணைப்பாளர் இ.கந்தவேள் அறிவித்துள்ளார். (203)

# நிறை குறைந்த பாண் விற்பனை செய்த 8 பேக்கறிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

## பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை மேற்கொண்டது

யாழ்ப்பாணம்,மார்ச் 7

யாழ்ப்பாணத்தில் நிறை குறைந்த பாண் உற்பத்தி செய்ததாக 8 பேக்கறிகள் கடந்த வாரம் யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் சபையினரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் குடாநாட்டில் உள்ள பேக்கறிகளைப் பரிசோதிப்பதற்கு பாவனையாளர் அலுவல்கள் சபையின் அதிகாரிகள் குழு ஒன்று திடீர் விஜயத்தை மேற்கொண்டது.

அப்போது அந்தக் குழுவினர் குடாநாட்டில் உள்ள 25 பேக்கறிகளில் தயாரிக்கப்படும் பாண்களின் நிறைகளை பரிசோதித்துள்ளனர்.

அந்தப் பரிசோதனையின் போது 8 பேக்கறிகளில் மிகவும் நிறை குறைந்த அளவில் பாண் தயாரிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

சுன்னாகம், யாழ்பாணம், சாவகச்சேரி ஆகிய பகுதிகளில் உள்ள பேக்கறிகளிலேயே நிறை குறைந்த பாண் தயாரிக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

அந்தப் பேக்கறிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளன.

கள அறிக்கைகள் தயாரிக்கப்பட்டதும் அடுத்த வார முற்பகுதியில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக யாழ்.செயலகத்தில் இயங்கும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(50-9)

## நாளை

| | |
|---|---|
| மாசி 24 | 08.03.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | துவாதசி |
| | பி.ப. 01.47 வரை |
| நட்சத்திரம்: | பூசம் |
| | மு.ப.11.37 வரை |
| சுபநேரம்: | 09.24 - 10.54 |
| ராகுகாலம்: | 04.54 - 06.24 |

# முல்லைத்தீவிலிருந்து தென்மராட்சிக்கு 100 குடும்பங்களைச் சேர்ந்த 354 பேர்

யாழ்ப்பாணம், மார்ச் 7

முல்லைத்தீவுப் பகுதியில் இருந்து 100 குடும்பங்களைச் சேர்ந்த 354 பேர் நேற்றும், நேற்றுமுன் தினமும் தென்மராட்சிக்கு அழைத்து வரப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் அழைத்து வரப்பட்டவர்களில் 56 குடும்பங்களைச் சேர்ந்த 183 பேர் கைதடி சைவச் சிறுவர் இல்ல நலன்புரி நிலையத்திலும் ஏனைய 19 குடும்பத்தைச் சேர்ந்த 56 பேர் கொடிகாமம் நலன்புரி நிலையத்திலும் தங்கவைக்கபட்டுள்ளனர். நேற்று அழைத்துவரப்பட்ட 25 குடும்பங்களைச் சேர்ந்த 115 பேர் மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஷெல் வீச்சில் காயமடைந்த 12 வயதுச் சிறுமி உட்பட 5 பேர் கைதடி நலன்புரி நிலையத் தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை மருத்துவக்குழு நேரில் சென்று சிகிச்சை அளித்து வருகின்றது. (50-9-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்
க.பேரின்பநாயகம் அவர்களின் அன்புச் சகோதரி
**அமரர் கதிரவேலு தெய்வானைப்பிள்ளை**

நேற்று(06.03.2009) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தமையையிட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பணிப்பாளரும், பணியாளரும்**
**வலி.கிழக்கு வடபகுதி ப.நோ.கூ.சங்கம், அச்சுவேலி**

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 17 ★ 05 ★ 1954



மறைவு 19 ★ 02 ★ 2005

### அமரர் கருணைவேல் தேவநாயகி

திதி: பூர்வபக்க ஏகாதசி

வருடம் நான்காகி மாண்டீர் என்று
சொல்ல மனசு மறுக்கிறது
யோசிக்க யோசிக்க நிமிடம் கடந்தாலும் உம்
சிரித்த முகத்தோற்றம் எம் நெஞ்சத்தை கடக்காது

அருண் சோ மில்,
துவாளி வீதி, இமையாணன்,
உடுப்பிட்டி.

கருணைவேல் (கணவர்),
அரும்செல்வி, ஷந்திரிகா,
ஜனகன் (பிள்ளைகள்).

## புன்னாலைக்கட்டுவனில் வாள் வெட்டுக்கு ஒருவர் பலி

யாழ்ப்பாணம், மார்ச் 7

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் இனந்தெரியாதோரின் வாள் வெட்டுக்கு இலக்காகி ஒருவர் பலியானார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த எம்.வாமதேவன் (வயது40)என்பவரே பலியாகியுள்ளார்.

அந்தப் பகுதியில் உள்ள கள்ளுத் தவறணைக்கு செலுத்துவதற்காக 15 ஆயிரம் ரூபாவை பிரஸ்தாப நபர் கொண்டு சென்றார் என் றும் தவறணைக்குச் சமீபமாக வைத்து அவர் வாள் வெட்டுக்கு இலக்கானார் என் றும் தெரிவிக்கப்பட்டது.

அவரை வெட்டிவிட்டு பணத்தை இனம் தொரியாதோர் பறித்துச்சென்றதாகவும் கூறப்பட்டது.

காயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் மரணமானார். (1-202-78)

## இரத்ததான முகாம்

யாப்பாணம், மார்ச் 7

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள 'சொண்ட்' நிறுவனத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை இரத்ததான முகாம் நடத்தப்படவுள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்புவோர் இந்த நிறுவனத்திற்கு வருகை தந்து இரத்ததானம் செய்யமுடியும் என்று யாழ், போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி அதிகாரி தெரிவித்துள்ளார்.

(203)

## உள்ளூரில் உற்பத்தியாகும் மதுபான விலைகள் குறைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 7

உள்ளூரில் உற்பத்தி செய்யப்டும் மதுபானத்தின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாக மதுபானத்தின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

660 ரூபாவாக இருந்த திக்கம் பனம் சாராயம் தற்போது 550 ரூபாவாகவும்,600 ரூபாவாக இருந்த வலிகாமம் (VSV-99) பனம் சாராயம் தற்போது 500 ரூபாவாகவும் 600 ரூபாவாக இருந்து வரணி பனம் சாராயம் தற்போது 500 ரூபாவாக விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. (204)

## ஒத்து மாறல்

வவுனியா நகரப் பாடசாலையில் கடமையாற்றும் பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர் வலிகாமம், யாழ் வலயப் பாடசாலை ஆசிரியருடன் ஒத்து மாற விரும்புகிறார். தொடர்பு: 060 221 0347

## விற்பனைக்கு

அதிபரின் தனிப்பாவனையில் உள்ள 500XXXX இலக்க MD90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு (சனி,ஞாயிறு பார்வையிடலாம்) தொடர்பு: 060 221 4915

## தவறி விட்டது

கடந்த 25.02.2009 அன்று தெய்வேந்திரம் பிரதீபன் என்பவரது மோட்டார் சைக்கிள் ஆவணம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், விசேட அடையாள அட்டை (S.தெய்வேந்திரம்-0902026746) என்பன அடங்கிய பொதி யாழ். நகரப் பகுதிக்கும், மருதனார் மடத் திற்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர் கள் S.தெய்வேந்திரம், கொக்குவில் கிழக்கு, குளப்பிட்டி லேன், கொக்குவில் என்னும் முகவரியிலோ அல்லது 0774805167 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப் படும்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1982 அவிட்டம் 2ஆம் பாதம் கிரகபாவம் 25 உயரம் 5' 8'', லண்டன் PR உடைய (Super Market உரிமையாளர்) மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை.
தொடர்பு: T.P.0776184434, 0774047531
E.mail vaniimb@yahoo.com

## சன்ரெல் தொலைபேசி விற்பனைக்கு

எனது சொந்தப் பாவனையில் உள்ள சன்ரெல் தொலைபேசி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: T.P.No. 0777651590
0214590316

## கோழிக் குஞ்சு விநியோகம்

**BAHIRA ப்றொயிலர் குஞ்சுகள்**
**09.03.2009**
**விநியோகிக்கப்படும்.**
★ றாஜீவ்- நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

## 'சாந்தி' பாடல் இறுவட்டு வெளியீடு

திருமறைக் கலாமன்றத்தினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் பாடல் இறுவட்டுக்களின் வரிசையில் 'சாந்தி' என்னும் புதிய பாடல் இறுவட்டு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் வெளியிட்டு வைக் கப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ் மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமியும், சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலனும் கலந்துகொள்வர். இறுவட்டுக்கான மதிப்பீட்டு உரையை எழுத்தாளர் செ.யோசப்பாலா வழங்குவார்.

மண்ணின் வாசம் வீசும் இப் பாடல்களுக்கான இசையமைப்பை இளைய இசையமைப்பாளர் கு.அற்புதன் மேற்கொண்டுள்ளார்.

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

அன்னை மடியில் 18★01★1968



ஆண்டவன் அடியில் 06★02★2009

### அமரர் ராதாகிருஷ்ணன் மகாதேவி

அம்மா! நீங்கள் எம் இருவரையும் 06.02.2009 பாடசாலையில் விட்டு விட்டு வந்து நாங்கள் திரும்ப பகல் வீடு வரும்போது,அம்மாவை நாங்கள் காணவில்லை அம்மா. அம்மா! எங்கு சென்றீர்கள் இன்னும் தேடுகின்றோம் அம்மாவைக் காணவில்லை.

அம்மா இல்லாமல் அப்பாவின் அரவணைப்புடன்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அம்மாவை இனி எங்கு காண்போம். அம்மா அம்மா ஓடி வருவீர்களா அம்மா.

இறைபதம் அடைந்த அன்பு அம்மாவின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.03.2009) சனிக்கிழமை முற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.நேசமிகு உறவுகளை இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இருபாலை வீதி,
பழனியாண்டவர் கோயிலடி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

எஸ்.ராதாகிருஷ்ணன் (கணவர்),
பிள்ளைகள்:
ஆர்.பவித்திரா, ஆர்.லக்ஷி
(யாழ். இந்து ஆரம்ப பாடசாலை).

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாலகிருஷ்ணபிள்ளை அன்னபூரணம்



தும்பளை, வெளிச்சவீட்டு ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் மந்திகையை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணபிள்ளை அன்னபூரணம் நேற்று (06.03.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் பாலகிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் பாலாம்பிகை, அன்னலக்சுமி (நோர்வே), சிறிஸ்கந்தராசா, தவராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் வே.நடராசா (நீதிமன்றப் பதிவாளர், மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்), திலிபன் (நோர்வே), விஜயலக்சுமி, ராதாலக்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் இராசமணி கணேசமூர்த்தி (இளைப்பாறிய தபாலதிபர்), சிவபாக்கியலக்சுமி, நடேசலிங்கம் (கணக்காளர் -ஓமான்) பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2009) சனிக்கிழமை மு.ப. 11மணிக்கு மந்திகையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எதுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உபதபாற் கந்தோரடி,
சாவகச்சேரி வீதி, மந்திகை.

தகவல்:
குடும்பத்தவர்கள்.

### சரவணமுத்து சிவபாதசுந்தரம் (மண்டையன்)



மண்டைதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.11/7, புகையிரத நிலைய வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிவபாதசுந்தரம் (மண்டையன்) நேற்று (06.03.2009) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னம்மா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சின்னம்மா தம்பதியினரின் மருமகனும் ரதிதேவியின் அன்புக் கணவரும் சிதம்பரநாதன், குணமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயசேகரர், உருத்திரா ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ரவிச்சந்திரன், உதயச்சந்திரன், மனோகரன், கல்யாணி, கீதாஞ்சலி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சண்முகராஜா மற்றும் கண்ணகை, வியாகரத்தினம், கெங்காதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிருந்தா, டினோஜன், ஜீவிதா, கீர்த்தனா, திவ்யாணி, லஜீத், ஷஜிகா, ரஞ்சித், நிஷானிகா, பவீனா, கிசான், அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் சகோதரியின் இல்லத்தில் இன்று (07.03.2009) சனிக்கிழமை பிற்பகல் 2மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### செல்வி கதிரவேலு தெய்வானைப்பிள்ளை

அச்சுவேலி தெற்கு, சிவசக்தி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தெய்வானைப் பிள்ளை நேற்று (06.03.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கதிரவேலு தம்பதியினரின் பாசமிகு மகளும் பேரின்பநாயகம் (ஓய்வுபெற்ற பொதுச் சுகாதார பரிசோதகர் - P.H.I, தலைவர், அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம்), காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் (பொலிஸ் உத்தியோகத்தர்), சத்தியமூர்த்தி (பணிப்பாளர், ஸ்ரார் ரியூசன் சென்ரர், அச்சுவேலி), தெட்சணாமூர்த்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (07.03.2009) சனிக்கிழமை இறுதிக்கிரியைகள் நடைபெற்று மு.ப. 11 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவசக்திகோயிலடி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல்:
க.பேரின்பநாயகம்
( P.H.I.-சகோதரன்).

### திருமதி குலசிங்கம் தயாராணி



கட்டுடை மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குலசிங்கம் தயாராணி நேற்று (06.03.2009) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் குலசிங்கத்தின் (சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன் துறை) அன்பு மனைவியும், அகிலனின் ( யா/கொக்குவில் இந்துக் கல்லூரி-மாணவன்) பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான சிறிதரன்-பரமேஸ்வரி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், தயாரஞ்சன் (கனடா), உதயகுமார் (H.N.B.,சிரேஷ்ட முகாமையாளர், கொழும்பு), தயாபாலினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.03.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுடை,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்மூடும் சுவடுகள்

## ந.சத்தியபாலன்

பரபரப்பான காலைப்பொழுது சாதாரணமாகவே சத்தமும் சந்தடியுமாகத்தான் இருக்கும் எனது வீடு. காலைப் பொழுதின் தனித்தன்மைகள் சொல்லிமாளாதவை. குளிக்கப்போன பையன்கள் கிணற்றடியில் சண்டையிடுவார்கள் - அடுப்படியிலிருந்து எனது இல்லத்தலைவி சத்தமிடுவாள்.

"கிணற்றடியில் என்னடா சண்டை?"

"அம்மா உவன் தடி மாடு. வாளியைத் தரானாம்.."

"ராசா தம்பிக்கும் குடுத்துக்குளியப்பு....."

இப்படியாய் ஏதேனுமொரு காரணத்தால் ஏதாவது நடந்தபடியிருக்கும்.

இன்று என்ன வீட்டுக்குள்ளே மகளுக்கும் தாய்க் கும் இடையில் "அஞ்சு கட்டுக் கொப்பிதானே கேட்டேன்.... பிறகென்ன...?" "அஞ்சுகட்டுச் சரிதான். முன் பக்கத்தில் போட்ட படம் எனக்குப் பிடிக்கேல்ல. நான் சொன்னனான் பூ அல்லது பறவையள் இருக்கிறதாப் பாத்து வாங்கச் சொல்லி.... அதில் 'றோபோ' படம் போட்டிருக்கு..... அதுவிசர்....." என் பத்து வயதுப் பெண் சிணுங்கி அழுதாள்.

"கடவுளே இந்தக் காலத்துப் பிள்ளையளுக்கு வசதி மெத்திப் போச்சுது. அந்தக்காலத்தில ஒரு மங்கல் சாம்பல் நிறத்தில மட்டைபோட்டு எக்சசைஸ் எண்டு எழுதின நாப்பது ஒற்றைக் கொப்பிதானே நாங்கள் பாவிச்சது. இதுகளுக்கு ஐஞ்சாம் வகுப்பிலேயே கட்டுக் கொப்பி அதுவும் லமினேற் பண்ணின வடிவான மட்டை போட்ட கொப்பி- அதுக்குள்ள அதுகளுக்குக் கொழுப்பு" மனைவி தொடர்ந்து பாடினாள்.

அந்தக் காலத்தில் நான் ஐந்தாம் வகுப்புப் படித்த ஞாபகம் வந்தது. கணிதம், தமிழ் இதெற்கெல்லாம் கொப்பி பாவித்த ஞாபகமே இல்லை. சிலேற்றும் பென்சிலும்தான்.

பக்கங்களில் மரப்பலகைச் சட்டத்தால் விளிம்பு வைத்த சிலேற். முன்புறம் கூரான சிவப்பு அல்லது நீலவண்ணப் பூப் போட்ட அல்லது சதுரம் சதுரமாய் டிசைன் போட்ட வண்ணத்தாள் ஒட்டப்பட்ட சிலேற் பென்சில்.

சில பிள்ளைகள் சட்ட விளிம்பு கழன்று போகாமல் சிறிய ஆணிகள் கொண்டு அவற்றைப் பொருத்தியிருப்பார்கள். சிலரது மரவிளிம்பில் அழகாகப் பெயர் எழுதியிருப்பார்கள். கணக்குப்பாட ஆசிரியர் கரும்பலகையில் எழுதும் கணக்கை சிலேற்றில் பார்த்தெழுதிச் செய்யவேண்டும்.

எனக்குக் கணக்குப் படிப்பித்தவர் நாகலிங்கம் மாஸ்ரர். கறுப்பு நிறமான கட்டை மனிதர். கரும்பலகையின் முன்நின்றால் கணிசமான பகுதியை அவரது ஆகிருதி மறைத்துவிடும். இவற்றில் மாணவர்கள் எழுதும் சத்தம் மட்டும் சர் சர்! எனக் கேட்கும். யாரும் கதைக்கமாட்டோம். கதைத்தால் பின்புறம் திரும்பச் சொல்லி நல்ல பூசை விழும். அடி கடுமையாக இல்லாவிட்டாலும் அவரது குரலும் பார்வையும் வயிற்றைக் கலக்கும் எல்லோருக்கும். நானோ 'பயந்த பீச்சாண்டி' என்ற திருப்பட்டத்தால் கௌரவிக்கப்பட்ட 'வைற் லெக்கோன் கோழி' (அப்படித்தான் ஆங்கில பாட ஆசிரியர் அழைப்பார்) ஒருமுறை கணக்குப் பாடத்தில் சோதனை நடந்தது. கணக்கு பாரதிக்கு மட்டுமல்ல எனக்கும் 'பிணக்கு' தான். சிலேற்றில் செய்த கணக்குகளுக்கு வெண்கட்டியால் புள்ளியிட்டுத் தந்தார். எனக்குக் கிடைத்ததோ ஒரு பெரிய முட்டை. எட்டிப் பார்த்துவிட்டு நக்கலடித்தார்கள் மற்றவர்கள். எனது மாக்ஸைப் பார்க்க எனக்கே வெறுப்பாயிருந்தது. கையில் எச்சில் துப்பி சிலேற்றிலிருந்து முட்டையை அழித்தேன். பின்னர் மாக்ஸ் பதிய அழைத்தபோது பின்புறம் காட்டிப் பூசை வாங்க நேர்ந்தது. மாக்ஸை அழித்திருக்கவேண்டாமே என்று பட்டது.

# காற்றில் கலந்த கீதம்

## சோ.குமுதா



"நிறைகுடம் தளம்பாது" என்பதற்கிணங்க எத்தனையோ கலைஞர்கள் தம்மை வெளிக்காட்டாது மிகவும் சாதாரணமானவர்களாக வாழ்கின்றனர், வாழ்ந்துள்ளனர்.

அந்தவகையில் இசைக் கலைஞர் இராமலிங்கம் நடராஜா குறிப்பிடத்தக்கவர். சரசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மட்டுவில் கமலாசனி பாடசாலை ஸ்தாபகரான கந்தையா இராமலிங்கம் அவர்களுக்கும், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செல்லமுத்து அம்மையாருக்கு 1926ஆம் ஆண்டு மார்கழி 10ஆம் திகதி மகனாகப் பிறந்தார்.

இவர் சிதம்பரம் கண்ணன் குடியைச் சேர்ந்த ஆறுமுகம் இராஜபிள்ளையிடம் ஆரம்ப இசையைக் கற்றவர். பின்னர் இந்தியா சென்ற பொழுது வயலின் வித்துவான் சு.பரமேஸ்வர ஐயரிடம் பயின்ற பின்னர்தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1946 இல் தனது இசைக் கல்வியைக் கற்றார். அத்துடன் சித்தூரார் எனச் சிறப்பிக்கப்படும் சிவானந்தம்பிள்ளை, கல்யாண கிருஷ்ணபாகவதர், சந்தானம் போன்றவர்களின் மூலமும் தனது இசை அறிவைப் பெருக்கிக்கொண்டார்.

இவரது முதல் கச்சேரி ரசிகரஞ்சனா சபாவில் 1950இல் மிருதங்கம் ப.அம்பலவாணரின் அனுசரணையுடன் நடைபெற்றது. பின்னர் தொடர்ந்து பல இசை அரங்குகளில் கச்சேரிகள் செய்த பலராலும் பாராட்டுப் பெற்றவர். இவர் பல பண்ணிசைப் போட்டிகளில் பங்குபற்றி முதலாம் இடங்களைப் பெற்றவராவார். தனியே இசை (வாய்ப்பாட்டு) மட்டுமன்றி வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல் என அனைத்து வாத்தியங்களையும் வாசிக்கத் தெரிந்ததுடன் அவற்றை மிக நுணுக்கமாக சுருதி சேர்ப்பதில் வல்லவர். இவற்றிலும் சிறப்பாக தம்புரா சுருதி சேர்ப்பதில் அவருக்கு இணை எவருமில்லை. இவர் இன்றி எந்தக் கச்சேரியும் நடைபெறாது எனும் அளவிற்கு மிக நுட்பமாக சுருதி சேர்த்துக் கொடுப்பது மட்டுமின்றி இசை நிகழ்ச்சி எங்கு நடந்தாலும் அங்கு தானாகவே பிரசன்னமாகி சுருதி சேர்ப்பதற்காக முன்வருவார். எங்கு சுருதி கலைந்தாலும் கச்சேரியின் நடுவிலேயே மேடையில் ஏறி சரி செய்வதற்கு என்றும் தயங்குவதில்லை.

1952இல் இலங்கை திரும்பிய இவர் முதன் முதலில் கற்பித்தது வசாவிளான் மத்திய கல்லூரியில். தொடர்ந்து மன்னார் உப்புக்குளம் யூனியன் கல்லூரியிலும், நாவலப்பிட்டி கதிரேசன், ஏழாலை மகா வித்தியாலயம், கோண்டாவில் போன்ற இடங்களிலும் கற்பித்துள்ளார். 1982ஆம் ஆண்டு மட்டக்களப்பு விபுலானந்த இசை நடனக் கல்லூரியில் இசை ஆசிரியராக மட்டுமின்றி அதிபராகவும் 5 வருடங்கள் கடமையாற்றினார். சித்தூர் சிவானந்தம்பிள்ளையின் சிபாரிசினாலேயே அப்பதவி தனக்குக் கிடைத்ததாக அடிக்கடி நினைவு. யாழ்.பல்கலைக்கழகத்தில் இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் வருகை விரிவுரையாளராகவும், அதற்காக மாணவர்களைத் தெரிவு செய்யும் குழுவிலும் இடம்பெற்றதுடன் பரீட்சகராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவரிற்கு பம்பலப்பிட்டி கதிரேசன் கோயிலில் "குரலிசை மன்னன்" எனும் பட்டமும், அகில இலங்கைக் கம்பன் கழகத்தினால் (யாழ்ப்பாணம்) "இசைப் பேரறிஞர்" எனும் விருதும் கிடைத்தன. பின்னர் 2002இல் நல்லூர்ப் பிரதேச சபையினரால் கலாசார விழாவின்போது "கலைஞானச்சுடர்" என்ற பட்டமும் 2005இல் நல்லை ஆதீனத்தால் "நல்லைக் குருமணி" கௌரவமும் வழங்கி சிறப்பிக்கப்பட்டார்.

2003ஆம் ஆண்டு வரை அதாவது தனது 77ஆவது வயது வரை தொடர்ந்து இசை நிகழ்ச்சிகள் நிகழ்த்தி வந்துள்ளார். குறிப்பாக நல்லூர்த் திருவிழாவின்போது நடத்தப்படும் தெய்வீக இசையரங்கில் இசைக் கச்சேரி நிகழ்த்தி வந்துள்ளார். 2003ஆம் ஆண்டின் பின்னர் தனது பார்வைக் குறைபாடு காரணமாகவும், உடல் நலமின்மை காரணமாகவும் அவரால் இசைக் கச்சேரி நிகழ்த்த முடியவில்லை.

பி.கே.குமாரசாமி, மிருதங்கம் எஸ்.இராமநாதன், சித்திவிநாயகம்பிள்ளை, மிருதங்கம் எம்.பி.செல்லத்துரை, வயலின் சோமஸ்கந்தசர்மா, வயலின் வைத்தியநாத ஐயர், புல்லாங்குழல் மூர்த்தி போன்ற கலைஞர்களுடன் இணைந்தும் இசைக்கச்சேரிகள் நிகழ்த்தியுள்ளார். சிறப்பாக சுவாமிநாத தம்பிரான் ஆனமணி ஐயருடன் இணைந்து யாழ்.இந்துக் கல்லூரியில் 'சத்தியவான் சாவித்திரி', 'ராமர்பட்டாபிஷேகம்', 'அரிச்சந்திரன்' போன்ற இசை நாடகங்களில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்...)

# சுந்தரமூர்த்தி நாயனாரின் பாடல்களில் துலங்கும் ஆடற்கருத்துகள் (சென்றவாரத் தொடர்ச்சி)

ஆடலிற்கான அரங்கம் முறைப்படி அமைக்கப்பட்ட தகவலை ஐம்பெருங்காப்பியங்களில் முதன்மையான சிலப்பதிகாரம் கூறியது. இதன் தொடர்ச்சியாக ஆடல்கள் யாவும் அரங்கிலே ஆடப்பட்டதாகவும், ஆலயங்களிலே ஆடலரங்கம் வேறாக இருந்ததாகவும் தேவாரமுதலிகள், நாயன்மார்கள் தமது பாடல்களிலே கூறியிருக்கிறார்கள். அந்தவகையில் சுந்தரரின் பாடல்கள் பலவற்றில் இச்செய்தியைக் காணலாம்.

"...... மடவார் நடமாடும் மணியரங்கு...." என்ற வரியிலே 'மணியரங்கு' என்பது முத்து மாலைகள், மணிகள் தொங்கவிடப்பட்ட அரங்கமாகக் கொள்ளலாம். இதன்படி நூலோர்கள் வகுத்தது போன்று அரங்கமும், அலங்காரமும் சமகாலத்தில் இடம்பெற்றதை அறியலாம்.

தொடர்ந்து அக்கால ஆடல்களிலே தண்ணுமை, முழவு, ஆமந்திரிகை, குழல் போன்ற பல பக்கவாத்தியங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் அறியமுடிகிறது. இவரது பாடல்களில் உள்ள

"......மண்ணார் முழவும் குழலும் இயம்ப...."

"...... குடமுழா நீர் மகிழ்வீர்....."

போன்ற வரிகள் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வாறு சைவசமயத்தின் மூத்தகுரவர்களின் பாடல்களில் ஆடல், இசைச் சான்றுகள் பல இடம்பெறுவதைக் காணலாம். சிவனது கூத்துத் தரிசனங்களும் கூத்தின் வழியாக எழும் அனுபூதி அனுபவங்களும் இவரது பாடல்களிலே பொதிந்துள்ளதைக் காணலாம். யோகநெறியிலே நின்று நம்பியாரூரர் ஆளுடைய நம்பி, வன்றொண்டன் போன்ற பல பெயர்களையும் கொண்டு வாழ்ந்து தமது 81ஆவது வயதிலே ஆடிச்சோதியிலே கைலையெம் பெருமானை அடைந்தார். சுந்தரரின் பாதம் போற்றி அவரது தேவாரப்பாசுரங்களைப் பாதுகாப்பது எம் கடனாகும்.

திருநாவலூர் பாதம் போற்றி.

[முற்றும்]

# வாரவசந்தம்

# யாருமே காணாத ஒரு துளி கண்ணீர்

## கோகுலராகவன்

ஒன்பது மணிக்கு முக்கியமான அலுவல். கச்சேரிக்குப் போக வேண்டும். கொஞ்சம் வேகமாகப் போய்க்கொண்டு இருக்கிறான் கருணா.

ஆனைக்கோட்டைச் சந்திக்கு வருகின்ற பொழுது இரு பிள்ளைகள் தமக்கு முன்னால் போகும் மோட்டார் சைக்கிள்களை மறித்து மறித்து ஏமாந்து போவதை அவதானிக்கிறான். இவன் கிட்ட வரும்போது இவனையும் கைகாட்டி மறிக்கிறார்கள்.

கருணாவுக்கு மிகவும் அவசரம். என்றாலும் மனம் கேட்காமல் நின்று இரண்டு பேரையும் ஏற்றிக் கொண்டு போகிறான். வழியில் அவர்களுடன் அவன் உரையாடவும் செய்தான்.

"எங்க போறியள் பிள்ளையள்?"

"நல்லூருக்கு!"

"கோயிலுக்கோ?"

"ஓம்"

இவனுக்கு ஆச்சரியம். நல்லூருக்கு ஏன் இப்போது போகிறார்கள்? அதுவும் தனியாக.

"கோயிலுக்குத் தனியாவோ போறியள்?"

"கோயில்ல அம்மா நிக்கிறா"

"ஏன்?"

"அம்மா கந்தசட்டி விரதம். கோயிலுக்குப் போட்டா"

"ஏன் விட்டிட்டுப் போனவா?"

"பள்ளிக்கூடம் போகச் சொல்லிப் போட்டுப் போனவா"

இடையில் காவலரண் ஒன்றில் இறங்கவேண்டி வந்தது. அங்கு இவனது அடையாள அட்டையைப் பார்த்து விட்டு,போகச்சொன்னார்கள். பிள்ளைகளின் பைகளையும் அவர்கள் பரிசோதனை செய்தபோது, கருணாவும் பையினுள் பார்த்தான். அதனுள் ஒரு படைவையும், சட்டையும் இருந்தது. தாய்க்குக் கொடுக்கக் கொண்டு போகிறார்கள் என நினைத்தான். அப்போதுதான் பிள்ளைகளையும் உற்றுப்பார்த்தான். பெண்ணுக்கு வயது 10, 12 ஆக இருக்கலாம். பெடியனுக்கு வயது 7, 8 தான் இருக்கும். எண்ணை இல்லாத தலை. சிக்காகத் தெரிந்தது. பழுப்பேறிய உடைகள். காலில் செருப்பும் இல்லை. சிறுவனின் ரீசேர்ட்டில் 'Care me' (அதன் தமிழ் அர்த்தம் – 'என்னில் கவனம் செலுத்துங்கள்') என்று இருந்தது. வாங்கும் போது அந்த ரீசேர்ட் நல்ல நீலநிறமாக இருந்திருக்கும்.

மீண்டும் அவர்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்டான்.

"அப்ப பள்ளிக்கூடம் போகாமல் ஏன் கோயிலுக்குப் போறியள்?"

"அம்மா சாப்பாட்டுக்குக் காசு தரவில்ல"

இவனுக்கு ஒருமாதிரி இருந்தது. இப்போது பள்ளிக்கூடங்களில் மதிய உணவு இலவசமாகக் கொடுக்கிறார்கள். முற்பகல்10 மணிக்குள் சாப்பாடு கிடைத்து விடும். அதை வைத்து கொஞ்சநேரம் சமாளிக்கலாம் என்று நினைத்துக் கொண்டு,

"பள்ளிக்கூடத்தில் சாப்பிடலாம் தானே" என்று கருணா கேட்டான்.

"அதுக்குத்தான் அண்ணா, காசை அம்மா தராமல் போட்டா"

இவனுக்கு ஆச்சரியம்.

"அதுக்கேன் காசு? சும்மாதானே குடுக்கினம்"

"இல்லை அண்ணா மாதம் 30 ரூபா குடுக்கோணும்"

"ஏன்?"

"மரக்கறி வாங்க"

இதிலுள்ள நன்மை, தீமை பற்றி அந்தத்துறையில் இல்லாததால் கருணாவுக்குப் புரியவில்லை.

"அடுத்த மாதம் தாறதாய் சொல்லிச் சாப்பிடலாம்தானே"

"இல்லை அண்ணா போன மாசக் காசும் இன்னும் கட்டேல்ல"

இவனுக்குச் சுருக்கென்றது.

"உங்களுக்கு அப்பா இல்லையோ?"

"காணாமல் போட்டார். அவர் திரும்பி வரவேணும் எண்டுதான் அம்மா விரதம் பிடிக்கிறா"

கந்தர்மடம் சந்தியில் அவர்களை இறக்கிவிட்டு நூறு ரூபா பணமும் கொடுத்து "பள்ளிக்கூடத்தில சாப் பாட்டுக் காசைக் கட்டுங்கோ" என்றான் கருணா.

முதலில் மறுத்து, பிறகு வாங்கிக் கொண்டனர்.

அந்தக்குழந்தைகளின் தாயின் விரதம் பலிக்க வேண்டும் என்று அவன் நினைத்துக் கொண்டான். இப்போது இரண்டு வருடமாகி விட்டது. அந்தத் தாயின் விரதம் பலித்ததா என்று தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியிலிருந்து வந்தோரை தொடர்ந்தும் முகாம்களில் அரசு அடைத்து வைக்காது

## தகவல்துறை அமைச்சர் அநுர பிரிய தர்ஷன யாப்பா தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்7

வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களை தொடர்ந்தும் முகாம்களில் அடைத்து வைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. யுத்தம் முடிந்ததும் அவர்களை முடிந்தளவு விரைவில் தமது சொந்த இடங்களில் குடியமர்த்த அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளும்.

-இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான அநுர பிரிய தர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைக் கூறினார். அங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு-

வடக்கில் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ள முகாம்களில் உணவில்லை; மருந்தில்லை; அடிப்படை வசதிகள் இல்லை என்றெல்லாம் சில ஊடகங்கள் பொய்க் குற்றச்சாட்டுகளை அரசின்மீது சுமத்தி வருகின்றன. ஆனால் வன்னியிலுள்ள முகாம்களுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளை அவதானித்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இடம்பெயர்ந்தோருக்கு அரசு வழங்கியுள்ள வசதிகள் குறித்து திருப்தியடைந்துள்ளதுடன், இலங்கை அரசுக்கு பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு மூன்று நேர சமைத்த உணவும் தேநீரும் வழங்கப்படுகின்றன. பாடசாலைகள், வைத்தியசாலைகள் இயங்குகின்றன. அதி உயர் நிலையில் அங்கு இடம்பெயர்ந்தவர்களின் நலன்கள் பேணப்படுகின்றன.

யுத்தம் முடிக்கு வந்தபின்னர் வன்னிப் பிரதேசத்தில் உள்ள கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும். இப்பகுதியில் வேறு கண்ணிவெடிகள் இல்லை என ஐ.நா. உத்தரவாதம் வழங்கிய உடனேயே இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள்.

அகதிகளின் போர்வையில் புலிகளும் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ளனர். புலிகள் அடையாளம் குத்தப்படவில்லை என்பதால் புலிகளையும் பொது மக்களையும் பிரித்துப் பார்க்க முடியாமல் உள்ளது. எனினும் அவர்களால் சிவிலியன்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடாது என்பதற்காக படையினர் விழிப்புடன் உள்ளனர்.

புலிகள் 7 ஆயிரம் சிறுவர்களை தமது படையில் சேர்த்துள்ளனர் என யுனிசெவ் நிறுவனம் தெரிவித்துள்ளது. இவர்களில் அநேகர் மோதல்களில் கொல்லப்பட்டுள்ளனர். மீதமானோர் இன்றும் புலிகளிடம் உள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கூடுதலான சிறுவர்கள் படையில் சேர்க்கப்பட்டனர். 2003ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் 2004ஆம் ஆண்டு வரையில் சிறுவர்களை படையில் சேர்க்கும் நடவடிக்கை உச்சக் கட்டத்தில் இருந்தது. யுத்தம் பற்றி மட்டுமே அரசு பேசுகின்றது. நாட்டில் எரியும் ஏனைய பிரச்சினைகளில் அரசு கவனம் செலுத்துவதில்லை என காலியில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரசின் மீது குறை கூறியுள்ளார்.

இது அர்த்தமற்ற குற்றமாகும். மக்களின் நலனில் அரசு அதிக அக்கறை காட்டுகின்றது. அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. சமையல் எரிவாயு விலை சில தினங்களுக்கு முன்னர் பெருமளவில் குறைக்கப்பட்டது - என்றார். (சி)

## தவறவிட்ட பொருள்களை பெற்றுக்கொள்ள அறிவுறுத்து

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவின் பழைய கட்டடத் தொகுதியில் இருந்து ஒரு தொகுதி பணம், சிறுவர் மோதிரம் என்பன கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலையின் கணக்காளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்களை ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு கணக்காளர் அறிவித்துள்ளார். (203)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,மார்ச்7

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் கரவெட்டி யங்லயன்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

* வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் எதிர் வல்வெட்டி வல்வை விளையாட்டுக் கழகம்.
* கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் எதிர் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக் கழகம்.

(50-86)

★ ★ ★

வலி.வடக்கு,மார்ச்7

யாழ்.மக்கள் எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

* சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம் எதிர் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம்.
* தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

(50-86)

## ஊழியர் சேமலாப நிதியில் அங்கத்துவம் பெறும் ஊழியர்களுக்கு நன்மை பயக்கும் சம்பள ஓய்வூதியத் திட்டம்

கொழும்பு,மார்ச்7

ஊழியர் சேமலாப நிதியில் அங்கத்துவம் பெறும் ஊழியர்களுக்கு மேலும் நன்மை பயக்கும் வகையில் ஓய்வூதிய சம்பளத் திட்டம் ஒன்று அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தொழில் மற்றும் மனிதவலு அமைச்சர் அதாவுட செனவிரத்ன இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தார்.

இப்புதிய சட்டத்தின்மூலம் மேற்படி உத்தேசம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கஷ்டப் பிரதேசங்களில் தொண்டர் ஆசிரியராகக் கடமைபுரிந்து 2007ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளவர்களில் 4700 பேரை உதவி ஆசிரியர்களாக நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்திருந்தார். தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களுக்கு ஐந்து வருடப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, மாற்று மின் உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டத்தின் 'க்லிரிஸீடியா' தாவரத்தை உற்பத்தி செய்வதற்காக காணி குத்தகைக்கு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

விவசாயம் மற்றும் கமநல சேவை அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைச்சமர்ப்பித்திருந்தார். இத்திட்டத்தின் கீழ் மகா வலி சீவலயப் பகுதியில் 123 ஏக்கர் காணி 30 வருட ஒப்பந்த அடிப்படையில் 'எவர் கிறின்' தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் 10 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்திசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், மாகாணங்களுக்கிடையில் பஸ் சேவைக்கான நேர அட்டவணை தயாரிக்கும்போது மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கைகள் மற்றும் செயல்முறைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார். இதன்மூலம் பயணிகளின் பாதுகாப்பும் வசதிகளும் மேம்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.


## POST OF STORE KEEPER

Applications are initiated from those who have passed 3 subjects in G.C.E. A/L to fill the post of store keeper.

Preference will be given to those with at least two years experience in store keeping. Salary negotiable depending on qualification and experience. Application with Bio data may be forwarded to reach the under signed on or before 15.03.2009.

**Human Resource Manager,**
**Euroville Engineers & Constructors (Pvt) Ltd,**
**866, Point Pedro Road, Nallur,**
**Jaffna.**

C/557411)


## மரண அறிவித்தல்



### கிருஷ்ணர் நல்லம்மா

தாவடி றோட், சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் நல்லம்மா 05.03.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - சிதம்பரம் தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற கிருஷ்ணர் அவர்களின் அன்பு மனைவியும் துரைசிங்கம், அமரர் தங்கச்சியம்மா மற்றும் கந்தசாமி, காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் முத்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் புஸ்பவதி, யோகராஜா (முகாமையாளர் ப.நோ.கூ. சங்கம், மானிப்பாய்), புஸ்பராசா (பிரான்ஸ்), யோகவதி, குணவதி (பிரான்ஸ்), செல்வவதி (பிரான்ஸ்), ஜெயவதி (பிரான்ஸ்), குணராசா ஆகியோரின் அன்புத் தாயும் வில்வராசா, சந்திரா, சாந்தா, யோகராசா, நாகராஜா, சண்முகராசா, சுஜேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (07.03.2009) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது கிருஷ்ணர் மனையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கி.யோகராசா (மகன்),*
*சகோதரர்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*
**021 4591078**

*"கிருஷ்ணர் மனை",*
*தாவடி றோட்,*
*சுதுமலை தெற்கு,*
*மானிப்பாய்.* (83306)


## விளம்பர வடிவமைப்பு நுட்பங்களை சிறப்பாகப் பயிற்றுவிக்கும் 'பெலெக்ஸ் கிரபிக்ஸ்'

விளம்பர விவரணம்

**Flex Graphics** இனால் நடத்தப்படும் **Flex Advertising** கல்வி நிறுவனம் இலங்கையில் ஒரு மாதத்தினுள் சிறந்த முறையில் **Creative Graphics** வடிவமைப்புக் கலையைப் பயிற்றுவிக்கும் ஒரே நிறுவனமாகும்.

முதலாவது பிரிவுகளுக்கான விரிவுரைகளும் கணனியில் நேரடியான பயிற்சிகளும் ஏற்கனவே ஆரம்பமாகி நடைபெறுகின்றன. பாடசாலையை விட்டு விலகியோர், விளம்பரம், சந்தைப்படுத்துதல், உத்தியோகத்தர்கள் இப்பயிற்சி நெறியில் ஆர்வமுடன் கலந்துகொள்கின்றார்கள். இங்கே எங்குமில்லாதவாறு நவீன விளம்பர முயற்சியில் காணப்படும் வடிவமைப்பு நுட்பங்கள் மாணவர்களுக்குச் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

சிறந்த கைதேர்ந்த ஆண், பெண் விரிவுரையாளர்களைக் கொண்டு நடத்தப்படும் இப்பயிற்சி நெறிகளில் விசேடமாகப் பெண் பயிற்சியாளர்களுக்கு பெண் விரிவுரையாளர்கள் விளக்கங்கள், வழிகாட்டுதல்கள் என்பவற்றை வழங்குவதுடன் தங்கள் அனுபவங்கள், ஆற்றல் என்பவற்றை பயிற்சியாளர்களுடன் பகிர்ந்து, விளம்பர உலகின் சிறந்த புதிய சந்ததியினரை உருவாக்குவதில் தங்களை அர்ப்பணித்துள்ளனர்.

**Creative Advertisement** ஐ வடிவமைப்பதில் அனுபவம், திறமை என்பவற்றை வழங்கி நூறு வீத வெற்றி, திருப்தி என்பவற்றிற்கு **Flex Advertising** கல்வி நிறுவனம் உத்தரவாதம் அளிக்கின்றது.

**Creative Graphics** வடிவமைப்புக் கலை யின் உண்மையான அனுபவத்தை விளம் பர கல்வி **Flex** நிறுவனத்தில் இணைந்து பெற்றுக்கொள்ளுங்கள்.


## வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைக்களுக்குப் பொருத்தமான இக்ராட் (ICTAD) Grade C10 {M09, M10} ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழே சுட்டிக்காட்டப்பட்ட கேள்விக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி: 09.03.2009 - 18.03.2009 பி.ப. 2 மணிவரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 19.03.2009 நண்பகல் 12 மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி: 19.03.2009 பி.ப. 2 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.
5. மூல கேள்விப் பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டுச் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, தலைமையலுவலகம், மானிப்பாய் என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியிலோ 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல்வேண்டும். ஒரு பிரதியைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
6. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

| இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | Vat வரி 15% |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக களஞ்சிய அறை விஸ்தரிப்பு | 3800.00 | 500.00 | 75.00 |
| 2 | அலுவலக உணவு அறை அமைத்தல் | 3900.00 | 500.00 | 75.00 |
| 3 | மானிப்பாய் பட்டின உபஅலுவலக கட்டட விஸ்தரிப்பு | 2700.00 | 500.00 | 75.00 |
| 4 | மானிப்பாய் மரக்கறிச் சந்தை கொட்டகை மீள்புனரமைப்பு | 1750.00 | 500.00 | 75.00 |

**திருமதி பு.சிவலிங்கம்,**
செயலாளர்,
வலி தென்மேற்குப் பிரதேச சபை,
மானிப்பாய்.

(ஸி/557412)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவருக்குக் காலணிகள்

தெல்லிப்பழை, மார்ச் 7

பின்தங்கிய வறிய மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு உதவும் நோக்கில் வயாவிளான், குட்டியப் புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு கியூடெக்- கரித்தாஸ் நிறுவனத்தினர் அண்மையில் 300 காலணிகளை இலவசமாக வழங்கியுள்ளனர். (203-150)

## ஆதனங்கள் மீள் மதிப்பீடு

யாழ்ப்பாணம், மார்ச் 7

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட அனைத்து ஆதனங்களும் மீள் மதிப்பீடு செய்யப்படவுள்ளன.

ஆதனங்களை இனங்காண்பதற்காக ஒவ்வொரு ஆதனத்தின் இலக்கங்களும் தெரியப்படுத்தக் கூடிய வகையில் ஆதனத்தில் எழுதி வைக்குமாறு நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஆதனத்திற்கும் சபையினால் ஏற்கனவே ஆதனச் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட அறிவித்தலில் உள்ள இலக்கங்களை எழுதி வைக்குமாறும் அறிவித்துள்ளார். (203-207)

## மாம்பழம் ஒன்று 300 ரூபா!

நல்லூர், மார்ச் 7

யாழ்ப்பாணம், திருநெல்வேலி மரக்கறிச் சந்தைகளில் மாம்பழம் ஒன்று ரூபா 300க்கு விற்பனை செய்யப்படுகிறது. சிறிய மாம்பழம் ரூபா 250 ஆக விற்கப்படுகின்றது.

நிஷா வெள்ள அனர்த்தங்களைத் தொடர்ந்து பழமரக் கன்றுகள் அழிந்துள்ளதால் இப்போது பழவகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக வியாபாரிகள் கூறுகின்றனர்.

தற்சமயம் இந்துக் கோயில்களின் உற்சவ காலங்கள் தொடங்கிவிட்டதால் கிரியைகளுக்கெனக் குறிப்பிட்ட பழங்கள் வாங்க வேண்டியுள்ளதாகவும் விலை அதிகரிப்பினால் திருவிழா உபயகாரர்கள் கஷ்டங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கின்றார்கள். பொதுவாக அதிகரித்த விலை காரணமாகப் பொதுமக்கள் பழங்களை வாங்குவது மிகவும் அரிதாகவே உள்ளது. (202-111)

## சாரணர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 7

மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய மூன்றாவது தொகுதி சாரணர்களுக்குச் சின்னஞ் சூட்டும் நிகழ்வு அண்மையில் வித்தியாலய அதிபர் செ.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

சாரண ஆசிரியர் ப.சந்திரமோகன் சாரணர்களுக்குச் சின்னங்களைச் சூட்டினார்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட சாரணர் மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரமணியம் சாரணர்களுக்குப் பிரம்புகளை வழங்கினார். (203-207)

* * *

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஆறாவது தொகுதி சாரணர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்குச் சாரணர் மாவட்ட ஆணையாளர் செ.சுப்பிரமணியம் கலந்து கொண்டார். (203-207)

# உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பவியல் பரீட்சை

## மாவட்ட மட்டத்தில் இடம்பெறவுள்ளது

யாழ்ப்பாணம், மார்ச்7

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலை மாணவர்களிடையே தகவல் தொழில் நுட்பவியல் தொடர்பான போட்டிப் பரீட்சை ஒன்றினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்தவுள்ளது.

இப்பரீட்சைக்கு ஜி.சீ.ஈ.உயர்தரம் 2010 இல் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களும் (கலை/வர்த்தகம்/உயிரியல்/ கணிதம்) தோற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை யாழ்ப்பாண மாவட்ட மேலதிக கல்விப்பணிப்பாளரினூடாக ஒழுங்கு செய்யப்பட்டு, வலயக்கல்விப் பணிப்பாளர்கள் உதவியுடன் நடத்தப்படுகிறது.

எதிர்வரும் புதன்கிழமை (11.03.2009) மு.ப.9 மணி முதல் 10.30 மணி வரை நடைபெறும் இப்பரீட்சை தகவல் தொழில் நுட்பம் சார்ந்த தேவைகளுள்ள பாடசாலைகளை இனங்கண்டு அவற்றை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை வகுக்க உதவும் என்று கூறப்படுகின்றது.

சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும். (203)

## சமய சந்நிதிகளில்

நல்லூர், மார்ச்7

நெடுந்தீவு மேற்கு கரமத்தைக் கந்த சுவாமி ஆலய தேர்த்திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் மாலை 4 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். மறுநாள் செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழா இடம்பெறும். (203-111)

* * *

சுழிபுரம், மார்ச்7

சுழிபுரம் மேற்கு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திற்கென அமைக்கப்பட்ட புதிய சகடை வெள்ளோட்ட நிகழ்வு இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

புதிய சகடையில் சுவாமி வீதிவலம் வருவார். தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (203-28)

* * *

வண்ணை, மார்ச்7

அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாசிமகத் திருவிழா நடைபெறவுள்ளது.

பூசைகள் காலை 8 மணிக்குத் தொடங்கும். 9 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவும் முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து 11 மணிக்கு அம்பாளின் ருதுசாந்தி நிகழ்வுகள் இடம்பெற்று அம்பாள் வீதியுலா எழுந்தருள்வார். (202-160)

* * *

மந்திகை, மார்ச்7

புலோலி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த நவநாள் திருவிழா எதிர்வரும் 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

திருவிழாக்களைப் பருத்தித்துறைப் பங்குத் தந்தை அருட்திரு.றெக்னோ அடிகளார் தலைமைதாங்கி நடத்துவார்.

18ஆம் திகதி திருச்சொரூப சுற்றுப்பவனியும் 19ஆம் திகதி அதிகாலை திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் நடைபெறும். (203-218)

# போலித்தனமானவர்கள் கைவரிசை மக்களே! விழிப்பாக இருங்கள்

யாழ்ப்பாணம், மார்ச்7

கணவன் தன்னிடம் விறகு பறிக்கச் சொன்னதாகக் கூறி மனைவியிடம் பணத்தை வாங்கிய நபர் மாயமாய் மறைந்தார்.

சண்டிலிப்பாய் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:

பிரஸ்தாப மனைவியின் கணவன் ஆசிரியர். அவர் காலையில் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

அந்தச் சமயம் பார்த்து வீட்டிற்கு வந்த அந்த மர்ம நபர் 'உங்களுடைய கணவர் அதாவது மாஸ்ரர் என்னிடம் விறகு பறிக்கச் சொன்னார்'.

விறகுகள் லான்மாஸ்ரரில் வந்துகொண்டிருக்கும்போது இடையில் டீசல் இன்றி நின்றுவிட்டது. டீசல் அடிப்பதற்கு ஆயிரம் ரூபா இருந்தால் தாருங்கள். விறகு பறித்தபின் மிகுதியைத் தாருங்கள் என்று கேட்டிருக்கிறார்.

அப்போது அந்தப் பெண் தன்னிடம் சில்லறைக் காசு இல்லை என்று கூறி 2 ஆயிரம் ரூபா தாளினை எடுத்துக்கொடுத்தார். டீசல் வாங்குவதற்குப் போத்தல் ஒன்றும் தருமாறு அந்த நபர் கேட்க அதையும் அவர் எடுத்துக் கொடுத்துள்ளார்.

இரண்டையும் வாங்கிய நபர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

பணத்தினை அந்த நபரிடம் கொடுத்த பின்னர் தனது கணவனுக்குத் தொலைபேசி மூலம் அழைப்பை ஏற்படுத்தி நீங்கள் ஓடர் கொடுத்த விறகு நன்றாகக் காய்ந்ததா? அல்லது பச்சையா? என்று கேட்டிருக்கிறார்.

எதையும் அறிந்திராத கணவன் 'நான் யாரிடமும் விறகு பறிக்கச் சொல்லி ஓடர் கொடுக்கவில்லையே' என்றார்.

அதன்பின்னர்தான் ஏமாற்றமடைந்த மனைவிக்கு நிலைமை தெரியவந்தது. வந்த நபர் போலித்தனமானவர் என்பது.

போலித்தனமான மனிதர்கள் இப்படியான குறுக்கு வழிகளிலும் பணம் சம்பாதிக்கத் தொடங்கிவிட்டனர். எப்பொழுதும் பொதுமக்களே! நீங்கள் விழிப்பாக இருங்கள். (203-9)

## மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மகளிர் தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பீடாதிபதி எஸ்.கே.யோநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடப் பீடாதிபதி கலாநிதி சிவமதி சிவச்சந்திரன் கலந்து கொள்வார். (203)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 7

சாவகச்சேரி நகர் மாதர் சங்கத்தின் மாதர் தின நிகழ்வுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பூவேந்தன் பாலர் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

திருமதி யோ.நவரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சாவகச்சேரி மகளிர் கல்லூரி உப அதிபர் திருமதி ரு.இராஜரட்ணம், தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர் க.உமாபாலன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (203)

## சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தில் வாழ்வாதார உதவிகள்

நல்லூர், மார்ச் 7

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவின் முள்ளானைக் கிராம அலுவலர் பகுதியைச் சேர்ந்த 20 பயனாளிகளுக்கு மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் 12 லட்சத்து 30 ஆயிரம் ரூபா வாழ்வாதார நிதியுதவியாக நேற்று வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான காசோலைகளை வழங்கினார். (203-111)

## நலன்புரி நிலையத்திலுள்ள மாணவர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், மார்ச்7

மிருசுவில் அரசினர் வித்தியாலயத்தில் இணைக்கப்படவுள்ள மிருசுவில், கொடிகாமம் ஆகிய நலன்புரி நிலைய மாணவர்கள் 700 பேருக்கு யேசுபணி அகதிகள் சபையினர் காலணிகள் வழங்கவுள்ளனர்.

அத்துடன், தென்மராட்சிக் கல்வி வலயத்தினால் இந்த மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட சீருடைத் துணிகளைத் தைத்துக் கொடுக்கும் பொறுப்பினையும் சபையினர் ஏற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வித்தியாலய வளாகத்தில் 'யுனிசெப்' நிறுவனத்தினரால் அமைக்கப்பட்டு வரும் வகுப்பறைத் தொகுதி வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதால் எதிர்வரும் 12ஆம் திகதி வகுப்புகள் ஆரம்பமாகுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்




கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தால் வடமராட்சியில் இன்பருட்டி, சக்கோட்டை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் வீடு ஒன்றை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் இன்பருட்டியில் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தின் பெயர்ப்பலகையை யாழ்.அரச அதிபர் க.கணேஷ் திரை நீக்கம் செய்து வைப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

வீட்டுத் திட்டப் பயனாளி ஒருவருக்கு யாழ்.ஆயர் அதி.வண.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை திறப்பு வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்த இரண்டு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கனமயம்

# யஜ்ஞோபவீத தாரண பிரமோபதேச அழைப்பு

விநாயகப் பெருமான் கிருபையை முன்னிட்டு ஸ்வஸ்திஸ்ரீ நிகழும்
சர்வதாரி வருடம் மாசி மாதம் 24ஆம் நாள் நாளை (08.03.2009)
ஞாயிற்றுக்கிழமை சித்தயோகமும் பூச நட்சத்திரமும் துவாதசித் திதியும்
கூடிய காலை 7 மணி முதல் 8.15 மணிவரையுள்ள
மீனலக்கின சுபவேளையில்

கந்தரோடை
பிரம்மஸ்ரீ. ம.இராமலிங்க ஐயரின் ப்ரபௌத்திரனும்
பிரம்மஸ்ரீ. இ.சோமேஸ்வர சர்மா விமலாதேவி
தம்பதியரின் பௌத்திரனும் புன்னாலைக்கட்டுவன்
பிரம்மஸ்ரீ.கு.சோதிநாத சர்மா சித்திராங்கி தம்பதியரின்
தௌஹித்திரனும் எமது சீமந்த புத்திரனுமாகிய

**சிரஞ்சீவி. வதனீச சர்மாவுக்கு**

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையாரினதும் புன்னாலைக்கட்டுவன்
ஆயாக்கடவை பிள்ளையாரினதும் திருவருளுடனும் கந்தரோடை
அருளானந்தப் பிள்ளையார் கோயில் மண்டபத்தில் யஜ்ஞோபவீத தாரண
பிரமோபதேசமும் நிகழ்த்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம்
தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து உபவீதனை
ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

உபநயன பிரமோபதேச குரு:
**மயிலணியூர் சிவஸ்ரீ.ச.சண்முகானந்தக் குருக்கள்.**
அருளானந்தப் பிள்ளையார் கோயில் (கந்தரோடை, சுன்னாகம்.)

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்:
சிவஸ்ரீ.சோ.வாகீஸ்வரக் குருக்கள்-காயத்திரி தம்பதியர்.

**உங்களை வரவேற்பதில் நாம் மகிழ்வடைகின்றோம்**

பிரம்மஸ்ரீ.ஐ.பாலசுப்பிரமணிய சர்மா அன்னலட்சுமி தம்பதியினர் (கொழும்பு)
பிரம்மஸ்ரீ.இ.சோமேஸ்வர சர்மா விமலாதேவி தம்பதியினர் (கந்தரோடை)
சிவஸ்ரீ.ப.ஜெயக்குமாரக் குருக்கள் உஷாதேவி தம்பதியினர் (கந்தரோடை)
சிவஸ்ரீ.பூ.கீதச்சந்திரக் குருக்கள் சரஸ்வதிதேவி தம்பதியினர் (கோப்பாய்)
சிவஸ்ரீ.ப.சிவசங்கரக் குருக்கள் உமாதேவி தம்பதியினர் (தாவடி)
பிரம்மஸ்ரீ.கு.சோதிநாத சர்மா (புன்னாலைக்கட்டுவன்)
பிரம்மஸ்ரீ.சோ.குகனேசசர்மா அபிராமி தம்பதியினர் (புன்னாலைக்கட்டுவன்)
சிவஸ்ரீ.நித்தியசிவகொண்டவக் குருக்கள் புரந்தரி தம்பதியினர் (சங்கானை)

(83175)


# நியமனங்கள்

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவிற்கு கடந்த புதன்கிழமைதொடக்கம் ரி.யேசுதாஸ் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமனம் பெற்றுள்ளார்.

கடந்த காலங்களில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களே பதில் கடமை புரிந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

(202-72)

* * *

ஆனைக்கோட்டை,மார்ச் 7

கரித்தாஸ் -கியூடெக் நிறுவனத்தின் சமாதான நிகழ்ச்சித்திட்ட மானிப்பாய் பிராந்திய ஊக்குவிப்பாளர் இ.யூயின் மசனட் அரச பணியில் நியமனம் பெற்றுச் செல்வதால் அவரது இடத்திற்கு பரராஜசிங்கம் சிறிசங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பிராந்தியத்தின் செயலாளராகச் செயற்பட்ட இவர் மேற்படி பதவிக்கு கரிந்தாஸ்-கியூடெக் இயக்குநர் கி.யோ. ஜெயக்குமாரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(202-20)

* * *

ஆனைக்கோட்டை பொதுச் சுகாதார பரிசோதகராக பருத்தித்துறை நகர சபையில் பணியாற்றிய கே.அருந்தவராசா இம்மாதம் முதல் இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.

இங்கு பணியாற்றிய க.பிறேம்குமார் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(202-100)

* * *

கைதடிப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகராக இ.ஈஸ்வரன் கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(288)

* * *

யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக திருமதி ந.அ. ஜெயராஜா கடந்த மாதம் 18 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

(111)


## விற்பனைக்கு

யமஹா நியூஸ் மேற் (Yamaha News Mate) மோட்டார் சைக்கிள், China புதிய ஜெனரேற்றர் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:N.நிறஞ்சன், விசுவத்தனை வீதி, பண்ணாகம், சுழிபுரம். (காரைநகர், பிரதான வீதி, சித்தன் கேணிச் சந்திக்கு அருகில்). ஞாயிறு மு.ப.10 மணி தொடக்கம் மு.ப.11 மணிவரை மட்டுமே பார்வையிடலாம். எனவே நேரத்தைக் கவனத்திலெடுத்து வீணான அலைச்சல்களைத் தவிர்க்கவும்.

## STUDY IN INDIA

GARDEN CITY COLLEGE
BANGALORE UNIVERSITY DEGREES
Accepted for migration to CANADA, AUSTRALIA, NEW ZEALAND and UK

Courses Offered

| | |
|---|---|
| BCA | Bachelor of Computer Application |
| B.Sc. | Computer Science/Microbiology/ Genetics Biotechnology/Fashion and Apparel Design |
| B.A. | Journalism/B.Com Computers |
| BBM | Bachelor of Business Management |
| BHM | Bachelor Of Hotel Management |
| BPT | Bachelor of Physiotherapy |
| LAW | Bachelor of Law |

- 5 Star status assessed by NAAC
- Super Graded Facilities, Hostels & Environment
- Ample references by satisfied students and Parents.

More than 200 Sri Lankan Students presently studying

www.studyingcc.com

தமிழில் தொடர்புகளுக்கு: 0777-767818/011-4512591
SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza,
50, Galle road, Colombo - 06.



## 50ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு

பொன்விழா அதிரடி
சிறப்புத் தள்ளுபடி விற்பனை

ஆரம்பக்கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரையான அனைத்துப் புத்தகங்களும் 10% தொடக்கம் 50% வரையான விசேட விலைக்கழிவுடன் விற்பனையாகின்றன.

எம்மிடம்

- சகலவிதமான பாடப்புத்தகங்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- பாடசாலை தர உள்ளீட்டுப் பொருள்கள்
- ஆய்வுகூட உபகரணங்கள்
- சங்கீத உபகரணங்கள்,
- புறொயெர்டர், புறொயெக்டர் ஸ்கிரீன்கள்
- மக்னெற், பிளனல் போட் வகைகள்
- மற்றும் அனைத்து ஸ்ரேசனரிப் பொருள்கள்

அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

M/S ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(சி/557401)


# காஸ் விலையை மீண்டும் உயர்த்த அரசு திட்டம் என்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, மார்ச் 7

சமையல் எரிவாயுக்களின் விலைகள் கடந்த வாரம் குறைக்கப்பட்டபோதிலும் அவற்றின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படும் என்று ஜே.வி.பி. நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறியது.

அதன்படி ஒரு கிலோ சமையல் எரிவாயுவின் விலை 8 வீதத்தால் அதிகரிக்கப்படும் என்றும் அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது என்றும் ஜே.வி.பியின் எம்.பியான சுனில் ஹந்துன்நெத்தி கூறினார்.

இது தொடர்பாக சுனில் ஹந்துன்நெத்தி மேலும் கூறியவை வருமாறு:-

உலக சந்தையில் சமையல் எரிவாயுக்களின் விலைகள் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளன. ஆனால், அரசு இங்கு சொற்ப அளவில்தான் விலையைக் குறைத்துள்ளது.

ஆனால், விலையைக் குறைத்து சில நாள்கள் கடந்த நிலையில் மீண்டும் அவற்றின் விலையைக் கூட்ட அரசு திட்டமிட்டுள்ளது. ஒருகிலோ சமையல் எரிவாயுவின் விலையை 8 வீதத்தால் அதிகரிக்க அரசு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது. அரசு சிலரின் கயிற்றை விழுங்கிக்கொண்டு மக்களை இவ்வாறு ஏமாற்றுகின்றது.

(சி)

# அமைச்சர் பந்துல மறுப்பு

கொழும்பு, மார்ச் 7

சமையல் எரிவாயுக்களின் விலைகள் 5 சதத்தாலும் அதிகரிக்கப்படமாட்டாது என்று வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சுற்றுச் சூழல் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

காஸ் கம்பனி சமையல் எரிவாயுக்களின் விலையை அதிகரிக்க என்னிடம் அனுமதி கேட்டபோது அதை மறுத்துவிட்டு அவற்றின் விலையைக் குறைக்க நான் நடவடிக்கை எடுத்தேன்.

கடந்த வருடம் நவம்பரிலும், இந்த வருடம் ஜனவரி மற்றும் மார்ச் ஆகிய மாதங்களிலுமாக மூன்று தடவைகள் சமையல் எரிவாயுக்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

அதன்படி மூன்று மாதங்களிலும் 800 ரூபா குறைக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவின அதிகரிப்பை எதிர்கொள்ளும் மக்களுக்கு இந்த 800 ரூபா குறைப் பானது மிக ஆறுதலாகும்.

ஆனால், இவற்றின் விலைகள் மீண்டும் அதிகரிக்கப்படும் என்று கூறுவதில் எந்தவித உண்மையுமில்லை. இவற்றின் வரிகள் அதிகரிக்கப்பட்டிருப்பது உண்மை. அதனால் விலை அதிகரிக்கப்படமாட்டாது - என்றார்.

(சி)

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,மார்ச் 7

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக ப.பாலேந்திராவும் , செயலாளராக ப.இரவிச்சந்திரனும் , பொருளாளராக ந.சிவபாலனும் தெரிவாகினர். (202-131)

* * * * * * *

கெருடாவில் ,மார்ச் 7

யாழ்.சமூக அபிவிருத்தி மன்றத்திற்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக திருமதி ஜெபமணிஜோசவ்பும் ,இணைப்பதிகாரியாக திருமதி நவநீதம் ஜெகதீசனும் ,ஆலோசகராகத் திருமதி ருக்குமணி ஆனந்தவேலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (202-253)

* * * * * * *

சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக வை.இராசரத்தினமும் ,செயலாளராக சி.மதீஸ்வரனும் பொருளாளராக திருமதி ம.கீர்த்திநாதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

(202-59)

# முன்பள்ளிக் கட்டடம் புனரமைப்பு

தெல்லிப்பழை, மார்ச் 7

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, திடற்புலம் கிராமத்தின் ஒளிநிலா முன்பள்ளி கட்டடத்தின் புனரமைப்புக்கென 'வேள்ட் விசன்' நிறுவனத்தினர் 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

கடந்த சில வருடங்களாக முன்பள்ளி மாணவர்கள் சனசமூக நிலையக் கட்டடத்திலேயே கல்வி கற்று வந்தனர்.

(202-250)


## 14ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 22 12 1942



இறப்பு 12 02 1995

**அமரர் குப்புசாமி முருகையா**

(முன்னாள் உரிமையாளர், "லக்சுமிபவான்", புன்னாலைக்கட்டுவன் சந்தி)
திதி: ஏகாதசி (07.03.2009)

அன்புள்ள அப்பாவே!
குடும்பத்தின் குலவிளக்காய்
அன்புடனும் பண்புடனும்
பாசத்துடனும் நேசத்துடனும்
இன்முகத்துடனும் புன்சிரிப்புடனும்
அன்போடு எமை வழி நடத்தினீரே!
பாரினிலே உத்தமனாய் வாழ்ந்து
பலருக்கு உதவி செய்தீரே அப்பா!
பாசமாய் சுற்றில் பிரிந்து
பாரினிலே எம்மை தவிக்கவிட்டு
பாதி வயதினிலே பரமனடி நேர்ந்தீரே!
பதின் நான்கு ஆண்டுகள் என்ன அப்பா!
பதின் நான்காயிரம் ஆண்டுகள் ஆனாலும் அப்பா
மாறுமோ எம் துயர் மறையுமோ உம் நினைவுகள்
வற்றாது எம் கண்ணீர்க் கடல்
ஓயாது எம் சோகப் புயல்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கொட்டைக்காட்டு ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி: மு.சரோஜினி (பாலா),
மகன்: மு.ராஜேஸ்கண்ணன்,
மகள்மார்:சுகந்தி, கேதீஸ், வாணி.

(83296)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற சுவாமி விவேகானந்தாவின் ஆளுமைபற்றிய முழுநேரக் கருத்தரங்கைப் பாடசாலை அதிபர் எம்.விக்னேஸ்வரன் விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். பருத்தித்துறை இராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரம சுவாமி சித்ருபானந்தாவும் அருகில் காணப்படுகிறார்.



வடமராட்சி லயன்ஸ் கழகம் பருத்தித்துறை ஜே.சி.வைத்திய நிலையத்தில் நடத்திய இலவச மருத்துவ சிகிச்சை முகாமின்போது யாழ்.போதனாவைத்தியசாலை உள்ளகப் பயிற்சி வைத்தியர் சற்குணம் சஜேந்திரன் நோயாளர் ஒருவருக்குச் சிகிச்சை அளிப்பதையும், லயன்ஸ் சி.பத்மநாதன், லயன் எஸ்.தங்கராசா ஆகியோர் அருகில் நிற்பதையும் காணலாம்.

(படம்:கர்ணன்)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட தையல், மனையியல் பயிற்சி நெறிகளில் பங்குபற்றிய யுவதிகளால் தயாரிக்கப்பட்ட பொருள்களின் கண்காட்சி அண்மையில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெற்றது.

கண்காட்சிக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட இணைப்பாளர் லயன் க.துரைராஜா, மாவட்ட இணைப்பாளர் லயன் எம்.கே.பத்மநாதன் ஆகியோரைக் கழக உறுப்பினர்களும் பயிற்சியாளர்களும் அழைத்து வருவதைப் படத்தில் காலாம்.

(படம்:தென்னவன்)



துன்னாலை குடவத்தைப் பகுதியில் தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாக அக்கிராம மக்களுடன் பருத்தித்துறை கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்திரு என்.அருள்நாதன், அருளுரையாளன் எஸ்.எசக்கியேல் ஆகியோர் கொண்ட குழுவினர் கலந்துரையாடுவதைக் காணலாம்.

(படம்:கர்ணன்)



இந்து சமய கலாசார திணைக்களத் தீவக புண்ணியகிராம நிகழ்ச்சியில் சர்வோதய சேவை வளாக அறங்காவலர் செல்வி பொ.ஜமுனாதேவி உரையாற்றுகிறார்.

எஸ்.உதயபாலன், பொ.சக்திவேல், எ.தங்கமயில், பேரின்பநாதன், ஜீ.காண்டீபன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:த.பரமலிங்கம்)



பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற பொங்கல் விழா நிகழ்வின்போது பொங்கலை சூரியனுக்குப் படையல் செய்து மகிழும் ஆசிரிய, மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர் குழுமத்தைப் படத்தில் காணலாம். கலாசாலையின் அதிபர் ம.இக்கினேசியஸ்சும் படத்தில் காணப்படுகின்றார்.

(படம்:அச்சுவேலிச் செய்தியாளர்)



வடகிழக்கு கல்வி கலாசாரப் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சால் 2005-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் ஜே.தர்மராஜா எழுதி நெறிப்படுத்தி வழங்கிய ‘‘அவசரத்தால் வந்த அவஸ்தை’’ நாடகம் 2 ஆம் இடத்தைப் பெற்றது.

கடந்த மாதம் அரியாலை, சரஸ்வதி கலாசார மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பரிசில்கள் வழங்கியதை அடுத்து நாடகக் கலைஞர்கள் எடுத்துக்கொண்ட படம்.

(படம்:த.பரமலிங்கம்)



ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையில் முறைசாராக் கல்விப் பிரிவு தையல் வகுப்பு அண்மையில் ஆரம்பமாகியது. அதன் முன்னாள் அதிபர் செ.சிவநடராசா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## தேவராஜக் குருக்கள் இரவீந்திரக் குருக்கள்

அல்வாய் மாலுசந்தி ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய

பிரதமகுரு தேவராஜக் குருக்கள் இரவீந்திரக் குருக்கள் அவர்களது பிரிவு எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தியிருக்கின்றது. அவரது எண்ணம் என்றும் எமது மனதைவிட்டு நீங்காது. அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.

மாலுசந்தி,
அல்வாய்.

க.யோகரத்தினம்-
பாரததேவி குடும்பம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர்

## கந்தர் சண்முகம்

அன்னை மடியில்
08.06.1934

ஆண்டவன் இணைப்பில்
05.02.2009

கடந்த 05.02.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும், யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயுற்றிருந்த வேளையில் அவருக்குச் சிகிச்சை அளித்த வைத்தியர்கள், தாதிமார்கள், உதவியாளர்கள் அனைவருக்கும், தொலைபேசி மூலம், கடிதம் மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், நேரடியாக வந்து ஆறுதல் கூறிய அனைத்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்று (07.03.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

17/1 தாவடி றோட்,
சுதுமலைச் சந்தி, மானிப்பாய்.

பிரிவால் துயருறும்:
ச.பாக்கியம் (மனைவி)

# வீதி அபிவிருத்தித் திணைக்களம் கேள்வி அறிவித்தல்

வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம் சார்பாக பிராந்திய கேள்விச் சபைத் தலைவரினால் பின்வரும் ஒப்பந்தங்களிற்கு தகுதி வாய்ந்த கேள்வி கோருவோரிடம் இருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் தற்போது கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்தத்தின் பெயர் | இக்ராட் பதிவு | மீளளிக்கப்படாத பிணைப்பணம் | மீளளிக்கப்படும் பிணைப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | திருநெல்வேலி - புத்தூர் வீதி (0.00 - 10.0 கி.மீற்) | M - 7 | 500.00 | 14,000.00 |
| 02 | ஏழாலை - கட்டுவன் வீதி (1.74 - 2.80 கி.மீற்) | M - 7 | 500.00 | 15,000.00 |
| 03 | வீரவாணி - வாதரவத்தை வீதி (0.00 - 6.00 கி.மீ) | M - 7 | 500.00 | 11,000.00 |
| 04 | இடைக்காடு பாடசாலை வீதி (0.00 - 1.275 கி.மீற்) | M - 7 | 500.00 | 27,000.00 |

பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்த காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தாகாரர் , பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. ICTAD வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பெறுப்பேற்பவர் போதிய அளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

III. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருத்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

IV. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரர் தனது புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

V. தகுதி வாய்ந்த கேள்வி கோருவோர் மேலதிக விவரங்களை வேலை நாள்களில் மு.ப. 8.30இல் இருந்து பி.ப. 4.15 மணிவரை 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

VI. ஆங்கில மொழியிலான ஒப்பந்த ஆவணங்களை 09.3.2009 முதல் 19.03.2009 வரை வேலை நாள்களில் முற்பகல் 9.00 மணியில் இருந்து பிற்பகல் 3.00 மணிவரை 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் மேலே அட்டவணையில் காட்டப்பட்டவாறு மீளளிக்கப்படாத, மீளளிக்கப்படும் கட்டணங்களை செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும்.

VII. அந்தந்த வேலைக்குரிய பொறி வைத்த கேள்விகள் தலைவர், பிராந்திய கேள்விச் சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், 657/1, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு 20.03.2009 முற்பகல் 10.30 மணிக்கு முன்பாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லது இதே விலாசத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். இதன் பின்னர் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கூறுவிலை திறக்கப்படும் நேரத்தில் கூறுவிலையிடுவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

VIII. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பேற்க மாட்டார்.

எந்திரி.சி.பூ.சிவநேசன்
பிரதம பொறியியலாளர்,
தலைவர், பிராந்திய கேள்விச் சபை.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
657/1, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

# கிருஷ்ணா திருமண சேவை

T.சுப்பையா, செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். T.P.021 222 9032

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்கள்.

1971 - M.B.B.S. (Doctor), 1976 - (Cima எக்கவுண்டர்), 1972 (எஞ்சினியர்) கொங்கொங் BANK (கொழும்பு), 1970 - (மாஸ்ரர்), 1975 (அவுஸ் ரேலியா) M.B.B.S

இன்னும் பல வெளியூர் உள்ளூர்க் குறிப்புகள் இருக்கின்றன.

# இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு.

றாஜீவ்
குளப்பிட்டி றோட்,
ஆனைக்கோட்டை.

# இறைச்சிக் கோழி விற்பனை

புறோயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

## சீரமைக்கப்பட்ட வடிகாலை பாதுகாக்குமாறு அறிவுறுத்து

வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக் குட்பட்ட சுன்னாகம் கந்தரோடை வடிகால், சுன்னாகம் மதவடி வடிகால், உடுவில் டச்றோட் வடிகால் என்பன சீரமைக்கப்பட்டுள்ளன.

இந்த வடிகால்களுக்கு நீரோட்டத்தைத் தடைசெய்யக்கூடியவாறு மண், குப்பை, ஏனைய கழிவுப் பொருள்கள் போடுவோர் மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத் தின் பிரிவு 60-10, 62 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என வலி. தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் அறிவித்துள்ளார். (204)

## பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்.சிவலிங்க யோககேந்திரா நிலையத்தினர் நடத்திய சைவசமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

சிவலிங்க யோக கேந்திராத் தலைவர் நா.நவராஜ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30மணிக்கு கொழும்புத்துறை ஆத்திப்புலம் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சைவப்புலவர் நித்தியசசிதரன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

## ஆற்றுப்படுத்தல் பயிற்சி

கோப்பாய், மார்ச் 7

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 13 மகளிர் விவகார குழுக்களிற்கு தலைமைத்துவம் மற்றும் சமூக ஆற்றுப்படுத்தல் பற்றிய பயிற்சி வகுப்புகள் கடந்த வியாழன், வெள்ளி ஆகிய நாள்களில் 'கெயர்' நிறுவனத்தின் அனுசரணையுடன் சிறுப்பிட்டி பொது நோக்கு மண்டபத்தில் நடத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் வலி. கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் பிரதம விருந்தினராக் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். (203-72)

# மரண அறிவித்தல்



## திருமதி.இலட்சுமியார் வேலாயுதபிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியை- யாழ்/ஐக்கிய சங்க சைவவித்தியாசாலை- சுழிபுரம்)

சுழிபுரத்தைப்பிறப்பிடமாகவும், தற்போது தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இலட்சுமியார் வேலாயுதப்பிள்ளை அவர்கள் 04.03.2009 புதன்கிழமை அன்று இரவு சிவபதமெய்தினார்.

இவர் காலஞ்சென்ற அம்பலவாணர்தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட மகளும், கைதடியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையாசேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சிதம்பரப்பிள்ளை, சின்னாச்சிப்பிள்ளை, பொன்னாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற செல் லம்மா சின்னையா (இளைப்பாறியஅதிபர்-கனடா),பொன்னம்மா (மல்லாகம்), காலஞ்சென்ற தங்கேஷ்வரியம்மா (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனியும்,வனிதா(ஆசிரியை - கொ/டி.எஸ். சேனநாயக்க கல்லூரி-கொழும்பு-07), சத்தியபாமா (ஆசிரியை-கொ/அல்அமீன் வித்தியாலயம்-கொழும்பு-03), சிவரஞ்சன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தயாரும், திருக்குமாரன்(சிரேஷ்ட வருமான வரி பரிசோதகர்-மொறட்டுவ நகரசபை), சுதாகரன் (ஜேர்மனி), சுதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் ஆசைமாமியாரும், அமிர்தன் (மாணவன்-றோயல்கல்லூரி-கொழும்பு-07), பவித்திரா (மாணவி-சைவமங்கையர் வித்தியாலயம்-கொழும்பு-06), வேல்ராஜ் (பிரான்ஸ்), வேணுகானன் ஆகியோரின் பேரன்புமிக்க பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் சனிக்கிழமை (07.03.2009) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஈமக்கிரியைகள் 08.03.2009 ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00 மணியளவில் நடைபெற்று கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல் :- மக்கள்,மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

இல: 5-3/2 பிறேசர் கோர்ட்,
பிறேசர் அவனியு,
தெஹிவளை.
T.P :- 5621488,0777-168808
'திருப்பதி'
காழுவன்,சுழிபுரம்.

# கண்ணீர்க் காணிக்கை



கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலைய முன்னாள் தலைவர்

## பொன்னையா சின்னத்துரை

அவர்கள் கடந்த 01.03.2009 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தமையை இட்டு துயற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினர்,
மனோன்மணி சனசமூக நிலையம், கொக்குவில்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 24 ★ 08 ★ 1956 |  | 16 ★ 02 ★ 2008 |

## திருமதி விமலாதேவி சபாரட்ணம்

திதி: ஏகாதசி(07.03.2009)

*அன்பின் திருவுருவாய் எம்முடன்*
*வாழ்ந்த் ஒளிவிளக்கே*
*பாசத்திற்கு உறைவிடமான!*
*தூய்மையான மனமே*
*ஆண்டு நூறு சென்றாலும்*
*உமை மறக்கத்தான் முடியாது!*

12/3, வைமன் வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீம ஏகாதசி விரதத்தின் பேறும் பெருமையும்

விரதங்களிலேயே ஏகாதசி விரதமானது மிகச் சிறந்ததும் விசேடமானதும், அதி உத்தமமானதும் ஆகும். ஏகாதசி அருளையும், பொருளையும், இன்பத்தையும், மோட்சத்தயும் அளிக்க வல்லது. ஏகாதசியானது காமிகம், மோட்சம் என இருவகைப்படுகின்றது.

பூலோக மாந்தர் தமது இஷ்ட்ட சித்திகளை இம்மையிலே பெறுவதற்கு வேண்டி அனுஷ்டிக்கப்பட வேண்டியது காமிகம் எனப்படுகின்றதாகிய பூர்வபக்ஷத்து ஏகாதசியாகும். எந்தவித பலனையும் எதிர்பாராமல் அனுஷ்டிக்கப்படுவது மோட்சம் எனப்படுகின்ற அபரபக்ஷத்து ஏகாதசியாகும்.

அமாவாசைக்கு முன் வருவது அபரபக்ஷமாகும் பூரணைக்கு முன் வருவது பூர்வபக்ஷமாகும். இவ்விதமாக மாதம் இரு ஏகாதசிகள் என் வருடம்இருபத்திநான்கு ஏகாதசிகள் வருகின்றன.

இவ்வாறு மகிமை பொருந்திய ஏகாதசி விரதத்தை வீமசேனனைத் தவிர ஏனைய பாண்டு மைந்தர்களும், கௌர வர்களும், நாட்டினர் அனைவரும் அனுஷ்டித்து வந்தனர்.

### வீமன் கேட்டு வியாசர் அருளியது

''இகபரசுகம் தரும் ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து கண்ணணைப் பூசித்து மோக்ஷமடைந்தலைவிட்டு உனது, ஊன் உடலை பெரிதாக வளர்க்கிறாய்'' என்று கௌரவர்கள் கேலி பேசியதால் கவலையடைந்த வீமன் வியாச முனிவரையடைந்து அவரைத் துதித்துப் பணிந்து வணங்கி ''தேவரீசுவாமி! எனது வயிற்றுப்பசி பொறுக்க முடியாமல் ஏகாதசி விரதத்தை அனுஷ்டிக்காமல் விட்டு விட்டேன். வருடந்தோறும் வரும் இருபத்து நான்கு ஏகாதசிகளை யும் என்னால் நோற்க இயலாது எனவே வருடத்தில் ஒருமுறை வரும் ஓர் ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து இருபத்தி நான்கு ஏகாதசிகளின் பலனையும் அடையும் ஒரு நல்ல வழியை எனக்குத் தெரியப்படுத்த வேண்டும்'' என்று பணிந்து வேண்டினான்.

''மாசி மாதத்திலே வளர்பிறையில் வரும் ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து வருடம் முழுவதும் வரும் இருபத்தி நான்கு ஏகாதசிகளின் விரத பலன்களைப் பெறலாம்'', என்று வியாச முனிவர் கூறியருளினார்.



வீமசேனனும் அவரிடம் இருந்து விடை பெற்று, அவரின் வாக்குப்படி மாசிமாதம் பூர்வபக்ஷத்து ஏகாதசியை ஆனுஷ்டிக்க ஆரம்பித்தான்.

அன்றைய தினம் அதிகாலையில் துயில் நீங்கி எழுந்து காலைக் கடன்களை முடித்து நீராடி நித்திய கடன் முடித்து திருமாலைப் பூசிக்கலானான்.

இருந்தாலும் அவனது வயிற்றிலே பசி உண்டானது. அவன் ஒரு சோலையை அடைந்து, அங்குள்ள வாழைப்பழங்களையும் மா, பலாப்பழங்களையும், கரும்புகளையும் உண்டு இளநீர்க் குலைகளையும் ஆயிரக் கணக்கில் பறித்தெடுத்து அருந்தினான். பின் நூற்றுக்கணக்கான குடங்களில் பாலைக் குடித்து ஓரளவு பசியைப் போக்கினான்.

அவன் மாலைக் காலத்தில் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து, அதன் பின் அவன் திருமாலைப் பலவாறு தோத்திரங்கள் சொல்லி பூசித்து அன்றிரவு முழுவதும் நித்திரை செய்யாமலிருந்து, அடுத்தநாள் அதிகாலையில் காலைக் கடன்கள் முடித்து நீராடி நித்திய கடன்கள் செய்து திருமாலைப் பூசைசெய்து அந்தணர்களுக்குத் தானம் வழங்கி துவாதசியில் பாராயணம் செய்யத் தொடங்கியபோது அவனது மிடறு உலர்ந்தமையினால் விக்கலுண்டானது.

முதலில் நெய்கலந்த அன்னத்தையுண்டு நீர், பால், மோர் முதலியன அருந்தி மிடறை நனையச் செய்து அதன்பின் வயிறாரப் போசனமுண்டு விரதத்தை முடித்தான்.

அன்று முதல் மாசி மாதத்தில் வருகின்ற பூர்வபக்ஷத்து ஏகாதசி ''வீம ஏகாதசி'' என்று வழங்கப்பட்டு வரலாயிற்று.

ஏகாதசி விரதம் அனுஷ்டிப்போர் தசமி கலவாத ஏகாதசியை அனுஷ்டிக்க வேண்டும். தாம்பூலம் தரித்தலாகாது, பக்தி பூர்வமாக அனுஷ்டிக்க வேண்டும். இரவு முழுவதும் நித்திரை கொள்ளாமலிருந்து அதிகாலையில் காலைக்கடன் முடித்து நீராடி துவாதசியில் பாரணம் செய்தல் வேண்டும்.

வீமசேனனால் அனுஷ்டிக்கப்பட்ட இவ்விரதத்தை பக்தி சிரத்தையோடு அனுஷ்டித்து வருவோர் சகல விதமான பாவங்கள், துன்பங்களின்றும் விடுபட்டு இம்மையில் நற்பேறுகளைப் பெற்று மறுமையில் நற்கதியடைவார்கள் என்பது உறுதி.

வியாச முனிவரின் வாக்குப்படி பன்னிரு மாதங்களிலும் வரும் ஏகாதசிகளின் பயன்களை இந்த வீம ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து பெறமுடியும்.

**பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக் குரு.**

## காயமடைந்த வீரர்களுக்கு கொழும்பில் சத்திர சிகிச்சை

பாகிஸ்தானின் லாகூர் நகரில் இனந் தெரியாத ஆயுததாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, காயமடைந்து தாயகம் திரும்பியுள்ள இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கு கொழும்பில் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன எனவும், அவர்களின் உடல்நிலை தேறிவருகின்றன எனவும் வைத்திய அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தத் தாக்குதலின்போது இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜயவர்த்தன, உபதலைவர் குமார் சங்கக்கார, ஆரம்பத் துடுப்பாட்டவீரர் தரங்க பரணவிதாரண, மத்திய வரிசைத் துடுப்பாட்டவீரர்களான திலான் சமரவீர, வேகப்பந்து வீச்சாளர்களான திலின துஷார, சுரங்க லக்மால், சுழல் பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ் ஆகியோருடன், அணியின் துணைப் பயிற்றுவிப்பாளர் பால் ஃபர்பிரீஸ் ஆகியோர் காயமடைந்திருந்தனர்.

புதனன்று நாடு திரும்பிய இவர்களில் நால்வர் தனியார் மருத்துவமனை ஒன்றில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்தனர்.

தாக்குதலின் பின்னர் உடல் உளரீதியாக சோர்வடைந்திருந்த கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் தத்தமது பழைய நிலைக்குத் திரும்பிவருகிறார்கள் என்றும் மருத்துவ அதிகாரிகள் தெரி வித்துள்ளனர். (சி)

## கல்கி பகவானின் ஜென்ம தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

ஸ்ரீ கல்கி பகவானின் 60 ஆவது ஜென்மதின நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது. (204)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 7

ஸ்ரீ கல்கி பகவானின் 60 ஆவது ஜென்மதின நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் அமைந்துள்ள ஸ்ரீ கல்கி இல்லத்தில் நடைபெறவுள்ளது. (204)

## மிதிவெடியகற்றும் பணிகள் 9 இடங்களில்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்.மிதிவெடி செயற்பாட்டு நிறுவனத்தால் இந்த ஆண்டு 9 இடங்களில் மிதிவெடியகற்றல் செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

இத்தகவலை யாழ்.மிதிவெடி செயற்பாட்டு நிறுவன அதிகாரி எஸ்.டெனிஷன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மிதிவெடி செயற்பாட்டு நிறுவனத்தின் 2009 ஆம் ஆண்டுக்குரிய வேலைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் மிதிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் 'ஹலோரஸ்ட்' நிறுவனத்தால் சங்கத்தானை கல்லூரி வீதியில் உள்ள பிரதேசம், சங்கத்தானை கோயிலடி, நுணாவில் கிழக்கு ஆகிய இடங்களிலும் 'டெனிஷ்' நிறுவனத்தால் ஊர்காவற்றுறை கரம்பொன் எனும் இடத்தில் இரண்டு பிரதேசங்களிலும்- செம்மணிக்குளம், புத்தூர் மேற்கு, சங்கத்தானை ஆகிய இடங்களிலும்- மிதிவெடி கயற்றும் பணிகள் இடம் பெற்று வருகின்றன என அவர் தெரிவித்தார். (9)

# இலங்கை அணி மீதான தாக்குதலில் புலிகளுக்குத் தொடர்பு இருக்கலாம்

## நிராகரிக்க முடியவில்லை என்கிறார் ரோஹித

கொழும்பு, மார்ச் 07

பாகிஸ்தானின் லாகூர் நகரில் இலங்கை அணி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் தொடர்பு பட்டிருப்பதற்கான சாத்தியக்கூறுகளை தாம் நிராகரிக்கவில்லையென இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் விஜயம் மேற்கொண்ட வெளிவிவகார அமைச்சர் அந்த நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் பேச்சுகளை மேற் கொண்டார்.

அதன் பின்னர் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சருடன் இணைந்து மேற்கெண்ட செய்தியாளர் மாநாட்டிலேயே போகொல்லாகம இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களை இழந்து வருவதால் அவர்கள் இந்தத் தாக்குதலில் தொடர்புபட்டிருக்கலாம் என்பதற்கான சாத்தியக்கூறுகளை நாங்கள் நிராகரிக்கவில்லையென -என்றும்

விடுதலைப் புலிகள் இயலாமை நிலையில் உள்ளதால், அவர்கள் எதனையும் செய்யலாம் என்ற கோணத்தில் இதனை அணுகுவதாகவும் போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானே லாகூர் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும், பாகிஸ்தானில் நாங்கள் நம்பிக்கை வைத்துள்ளோம்.

இலங்கையர்களுக்கு எதிராக வெளிநாடொன்றில் மேற்கொள்ளப்பட்ட மோசமான தாக்குதல் என லாகூர் சம்பவத்தை விவரித்துள்ள போகொல்லாகம, பாகிஸ்தான் எமது நண்பன்-என்றும் தெரிவித்தார். (அ-சி)

## 2 ஆயிரத்து 900 பேருக்கு முதியோர் அடையாள அட்டைகள்

கோப்பாய், மார்ச் 7

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 2007 ஜனவரி மாதம் தொடக்கம் இவ்வருடம் இதுவரையான காலப் பகுதியில் 2 ஆயிரத்து 900 பேர் முதியோர் அடையாள அட்டைகளைப் பெற்றுள்ளனர்.

மேலும் 600 விண்ணப்பதாரிகளுக்கு அடையாள அட்டைகள் விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (203-72)

## தவக்காலச் சிந்தனை



### வெளிவேடக்காரர்போன்று அறச்செயல் செய்யாதீர்கள்

''மக்கள் பார்க்க வேண்டும் என்று அவர்கள் முன் உங்கள் அறச்செயல்களைச் செய்யாதீர்கள்'' (மத் 6:1) என்று இறைமகன் இயேசு நமக்குக் கற்பிக்கின்றார். இதிலிருந்து நாம் கற்றுணர வேண்டியவை என்னவென்றால் கிறிஸ்தவர்களாகிய நாம் அறச்செயல்களைச் செய்கின்றபோது எதைத்தவிர்க்க வேண்டும் என்பதோகும்.

இன்று கிறிஸ்தவ சமூகத்திலே வாழும் சில பிரபல்யங்கள் தங்களின் சுய விளம்பரத்திற்காகவும், புகழ்ச்சிக்காகவும், தம்மை சமூக சேவையாளர் என்பதை மக்கள் மத்தியில் காட்டுவதற்காகவும் அறச்செயல்களைச் செய்து பந்தா புரிவதை நாம் காணக் கூடியதாக இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட சுயநல சிந்தனைகளோடு அறச்செயலில் ஈடுபடுவோரை இறைமகன் இயேசு ''வெளிவேடக்காரர்'' என்று கூறியதுடன் விண்ணகத் தந்தையிடமிருந்து எந்தவிதமான கைம்மாறையும் பெற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று எச்சரிக்கின்றார்.

ஒரு ''விதையானது சுயநலமற்று, தரையிலே விழுந்து, தன்னையே மறந்து தனக்கே இறந்து செடியாக, மரமாக வளர்ந்து மிகுந்த பலன் கொடுப்பது போன்று'' நாமும் எமது சுயநோக்கத்தை மனதில் வைத்து அறச்செயலில் ஈடுபடாமல் கடவுளின் மகிமையைக் கண்முன் வைத்து இறைமகன் இயேசு கற்பித்தபடி அறச்செயல்களைச் செய்து விண்ணகத் தந்தை வழங்கும் கைம்மாறை பெற்றுக் கொள்வோமாக.

சு. அருள்நேசன், குருநகர்.

## மக்கள் முகம்



யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக திருமதி நவமணி ஜெயராஜா கிராம அபிவிருத்தி அமைச்சினால் நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார்.

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றிய ஏ.தியாகமூர்த்தி அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். (218)

* * *



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் புனர்நிர்மாணப் பணிகளில் பிரதம பொறியியலாளராக இருந்து பணியாற்றி வந்த ப.கிரிதரன் மாவை ஆதீனத்தால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் ஆலய மண்டபத்தில் மஹாராஜ ஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் மேற்படி பொறியியலாளரும் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான ப.கிரிதரனுக்கு பொன்னாடை போர்த்தியும் மலர்மாலை அணிவித்தும் பாராட்டியும் கௌரவித்தார்.

மேற்படி ஆலயம் 1995 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாலயத்தின் அழகான புனர்நிர்மாணத்திற்கு சிறந்த் பொறியியலாளராகவும், தொழில்நுட்பவியலாளராகவும் செயற்பட்டு வந்தமைக்காக இவர் பாராட்டப்பட்டுள்ளார். (224)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மௌனத்தைக் கலைப்போம்! வாழ்வை வெற்றி கொள்வோம்!!

**நாளை மார்ச் 8 அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

நாளை மார்ச் 8 சர்வதேச மகளிர் தினமாக உலகம் முழுவதும் நினைவுகூரப்படுகின்றது. மகளிருக்கென பிரகடனப்படுத்தப்பட்ட இத்தினமானது மகளிர்களுக்கான உரிமைகள், பாதுகாப்பு, மேம்பாடு என்னும் நோக்கோடு அனுசரிக்கப்பட்டு வருகின்றது.

முதன்முதலில் 1887களில் அமெரிக்காவில் உள்ள ஓர் ஆடைத் தொழில்சாலையில் நடந்த தீ விபத்தில் பாதிக்கப்பட்ட பெண்களின் உரிமைகளுக்காகத் தொடங்கிய போராட்டமானது தீ போல் பரவி இன்று உலகம் முழுவதும் கருத்தில் கொள்ள வேண்டிய விடயமாகப் பரிணாமமடைந்துள்ளது. இது நாடு, இன, மொழி, மத பேதமின்றி பெண்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்பதற்கு ஆதாரமாகவும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகவும் உள்ளது.

பெண்ணானவள் குடும்பத்தில் முக்கிய பொறுப்புக்களை ஏற்பதோடு, பிரதான பாத்திரங்களாகவும் அங்கம் வகிக்கின்றாள். சிறுமியாக, யுவதியாக, மனைவியாக, தயாக, மூதாட்டியாக என பல்வேறு பரிமாணமங்களை எடுக்கும் பெண் மீது குடும்பத்தின் முக்கிய பொறுப்புக்களும் சுமத்தப்படுகின்றன. அத்துடன், அனைத்து உணர்வுகளுக்கும் வடிகாலாகவும் பெண் திகழ்கின்றாள்.

இந்நிலையிலுள்ள பெண்களின் உணர்வுகளும் உரிமைகளும் மதிக்கப்படுகின்றதா? என்பது கேள்விக்குறியே.

பெண்களின் உரிமைகள் மீது சமூகம் அத்துமீறிப் பிரவேசம் புரிகின்ற காரணத்தினால் பெண்களிற்கெதிரான வன்முறைகள் உருவாகின்றது. இவ்வன்முறைகள் சமுதாயத்தினால் சில சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டு பாராமுகமாக்கப்பட்டிருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

பெண் உணர்வு ரீதியாக இலகுவாகத் துன்பப்படுத்தப்படுகின்றாள். எவ்வாறெனில் ஒன்றும் தெரியாதவள், எதற்கும் உபயோகமற்றவள், அறிவற்றவள் என்னும் பொருள்பட பிறரின்முன் தாழ்த்திக் கதைத்தல், தாழ்வாக நடத்துதல், அவமரியாதை செய்தல் போன்ற சம்பவங்கள் அடிக்கடி எமது குடும்பங்களில் சாதாரண நிகழ்வாகும். அத்துடன் குடும்பங்களில் நடைபெறும் தப்பிதங்களிற்குரிய முழுக் காரணங்களும் பெண்கள் மீதேசுமத்தப்படுகின்றது. இந்நிகழ்வானது பகிடியாகவும் விளையாட்டாகவும் கருதப்பட்ட போதிலும் பெண்களின் உணர்வுகள் பாதிப்படைகின்றது என்பதை யாரும் நினைக்கத் தவறுகின்றனர். இச் செயலானது பெண்களின் தன்நம்பிக்கை யைச் சிதைப்பதோடு அவளைத் தாழ்வு மனப்பான்மைக்கிட்டுச் செல்கின்றது. பெரும்பாலான பெண்கள் தாழ்வு மனப்பான்மையுடனும், குற்ற உணர்வுடனும் காலத்தைக் கடத் துகின்றனர்.

பெண்கள் மீதான உடலியல் துன்புறுத்தல் மற்றுமொரு வன்முறையாதக் கருதப்படுகின்றது. இவ்வாறான துன்புறுத்தல் அடிக்கடி குடும்பங்களில் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. அடித்தல், எரித்தல், வெட்டுதல், உதைத்தல் போன்ற சம்பவங்கள் எமது சமுதாயத்தில் சாதாரணமாகவே நடைபெற்றுக்கொண்டிருப்பது வைத்தியசாலையில் உள்ள குறிப்பேடுகளில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இது மிகவும் அபாயகரமானதாகும். ஆனினும் இவ்வாறான சம்பவங்கள் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுவது மிகவும் வேதனைக்குரிய விடயங்களாகும். கணவனின் துன்புறுத்தல், தந்தையின் துன்புறுத்தல், தமயனின் துன்புறுத்தல் என்பன அங்கீகரிக்கப்பட்டதொன்றாக எமது சமூக அமைப்பில் காணப்பட்டு வருவது மாற்றப்பட வேண்டிய தொன்றாகும். அத்துடன், இவ்வாறான துன்புறுத்தலுக்குட்பட்ட பெண்கள் உண்மைகளை வெளிப்படுத்த அங்கீகரித்தலும், வழிப்படுத்துதலும் எமது சமூகத்தின் கடமையாகும்.

பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய மற்றுமொரு விடயம் ஆண்களினால் ஏமாற்றப்படலாகும். பெரும்பாலான யுவதிகள் இதில் அடங்குவர். தற்போது இந்நிலை அதிகரித்து வருவது கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். பெண்களிற்கு ஆசை வார்த்தைகளைக் கூறி அவர்களின் மூலம் தங்களின் தேவைகள் பூர்த்தியானவுடன் இலகுவாக கைவிடுவது எமது சமுதாயத்தில் அதிகரித்து வருகின்றது. இதனால் பாதிப்படைந்த பெண்கள் குழந்தைகளுடன் செய்வதறியாது நிற்பதையும், சமூகத்தினால் புறக்கணிக்கப்படுவதையும், சமூகத்தில் தமக்குரிய மரியாதை இழந்தவர்களாய் தனித்து நிற்பதையும் காணக்கூடியதாய் உள்ளது. இந் நிலைக்கு பெண்களின் அறியாமையையும், அதீத நம்பிக்கையும், சரியான வழிநடத்தல் இன்மையுமே முக்கிய காரணமாக உள்ளது.

ஆண்களிற்கு முன்னுரிமை வழங்குதல் என்பது எமது சமூகத்தின் வழக்கமாகக் காணப்படுகின்றது. இதனால் பெண்களிற்கு தலைமை தாங்கவோ, கருத்துக்களை வெளிப்படுத்தவோ, திட்டங்களை முன்னெடுக்கவோ, தமக்குரிய சம ஊதியத்தினைப் பெற்றுக் கொள்ளவோ சந்தர்ப்பம் குறைவாகவே காணப்படுகின்றது. இந்நிலை ஆண்களின் விகிதாசாரக் குறைவாலும், சமூக விழிப்புணர்வுச் சிந்தனையாலும் எமது பிரதேசத்தில் குறைவடைந்து வருகின்றதைக் காணக்கூடியதாக உள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ளவைகள் பெண்களிற்கெதிரான சில வன்முறைகளே. இதனால் பெண்கள் தற்துணிவற்றவர்களாகவும், செயலாற்றல் குறைந்தவர்களாகவும், நோயாளிகளாகவும், சமூகத்தில் உலாவி வருகின்றனர். இந்நிலை மாற்றப்பட வேண்டியது எமது அவசியமானதாகும்.

பெண்களின் மேம்பாட்டிற்கு சட்டத்துறை, வைத்தியத்துறை, கல்வித்துறை, தொழிற்துறை, பாதுகாப்புத்துறை போன்றன முக்கிய கவனமெடுக்க வேண்டும். அத்துடன், பெண்கள் தங்களால் தீர்க்க முடியாத பிரச்சினைகளை தைரியத்துடன் வெளிக்கொணர முன்வர ஊக்குவிக்க வேண்டும்.

இத்தகைய பெண்களிற்கு உதவிபுரியும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் குறித்த விவரங்களை அனைத்து நிலையிலுள்ளோருக்கும் தெரியப்படுத்துதல், வழிகாட்டல் என்பன பாதிக்கப்பட்ட பெண்களின் மௌனங்களைக் கலைக்கச் சந்தர்ப்பமாக அமையும். ஏனெனில் பெண்களின் மேம்பாடில்லா நாட்டோ, வீடோ மேம்பாடடைய முடியாதென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

**கிருபா பத்மனேஸ்வரன்,**
**இணைப்பாளர்,**
**தேவை நாடும் மகளிர்,**
**யாழ்ப்பாணம்.**

## மணிவிழா நாயகனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உயர்திரு நா.சத்தியநாதன்**
(BA.,Dip.in Ed, PGDM, M.Ed)
கோட்டக் கல்விப் பணிப்பாளர், சாவகச்சேரி கல்விக் கோட்டம்

எமது வித்தியாலயத்தின்
அன்பிற்கினிய ஆசானாய்
ஆன்றோர் போற்றும் அதிபராய்த் திகழ்ந்து
பதவி உயர்வுடனே தென்மராட்சி
கல்விக் கோட்டத்தின் நல் அதிகாரியாய்
ஞாலம் போற்றும் பண்பாளனாய்
சேவையாற்றி ஓய்வுடன் இன்று மணிவிழாக்
காணும் நாயகனையும் அவரது குடும்பத்தினரையும்
நலமுடன் நீரூழி காலம் வாழ்கவென வாழ்த்துகிறோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்.

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கு பயிற்சி வகுப்பு இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்.7

யாழ்.குருசோ வீதியில் அமைந்துள்ள 'கிறீன் பீல்ட்' விளையாட்டுக்கழக நிலையத்தில் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பயிற்சி வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்தப் பயிற்சி வகுப்பில் இணையவுள்ளோர் பொபி ஸ்ரூடியோ, 33, குருசோ வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2008ஆம்ஆண்டு பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றியவர்களும் ஏற்கனவே உதைபந்தாட்ட மத்தியஸ்தர் களாக கடமையாற்றிக் கொண்டிருப்பவர்களும் அன்றைய தினம் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(204)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பரீட்சைகள்- 2008

**01. வணிக முதற் தேர்வு-2007 மற்றும் 2008**
**02. வணிகமாணி- பகுதி-I-2007**
**03. வணிகமாணி- பகுதி-II 2006 & 2007**
**04. வணிகமாணி- பகுதி-III- 2005 & 2006**

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் மிக விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.100/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி, விவரங்கள் விரைவில் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா.100/= இற்கான காசுக் கட்டளை/ தபாற் கட்டளையுடன் சுய முகவரியிடப்பட்ட ரூபா. 20/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ.அளவுடைய தபால் உறையுடன் **உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 15.04.2009 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**வெளிநிலை தேர்வுநாடிகளின் பதிவேடுகள்**

* கலை முதற் தேர்வு- கல்வியாண்டு 2006/2007 மற்றும் 2007/2008
* வணிக முதற்தேர்வு- கல்வியாண்டு 2006/2007 மற்றும் 2007/2008
* கலைமாணி பகுதி-I- கல்வியாண்டு 2006/2007 மற்றும் 2007/2008
* நுண்கலைமாணி (சங்கீதம்/ நாட்டியம்) 2006/2007 மற்றும் 2007/2008

மேற்படி கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வுநாடிகளாகப் பதிவு செய்தவர்கள் தங்களுக்குரிய பதிவேட்டினை 11.03.2009 புதன்கிழமை முதல் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தினதும், கல்வித் தகைமைச் சான்றிதழினதும் (க.பொ.த.உயர் தரம்) மூலப்பிரதிகளைச் சமர்ப்பிக்காதோர் அவற்றைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**பதில் பதிவாளர்.**
06.03.2009.

(சி/557416)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

விக்னா கல்வி நிறுவன சிரேஷ்ட ஆங்கில ஆசிரியர்
திரு.விஸ்வநாதன் அவர்களின் பாசமிகு மாமன்
**அமரர் சுப்பையா மாசிலாமணி**
அவர்களின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

மாசிலாமணி மனிதராய் சீலராய் இனுவை
மாண்புடை மன்னவனாய் சிங்கார மழலைகள்
மலைபோல் மகிழ்வான வாழ்வுதனை வைத்த
மாசிலாத உத்தமத் தெய்வத்தை வணங்குகின்றோம்.

விக்னா கல்வி நிறுவனம்,
கிளை 417, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**இயக்குனர்,**
**உதவி இயக்குனர்,**
**ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்.**

(83309)



**Hatton National Bank**

## அடகுப் பொருள்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 15.01.2008 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவண செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுநகைகள் 14.03.2009 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்....

* கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியை (ரூபா.500) செலுத்தி

அல்லது

* தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கு ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

**ஏல விற்பனைத் திகதியினைப் பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.**

**ஹற்றன் நஷனல் வங்கி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சூடானிய ஜனாதிபதிக்கு பிடியாணை விடுத்தமையை கண்டித்துப் பேரணி

## ஆதரவாளர்களுடன் ஆடிமகிழ்ந்தார் அவர்

கார்ட்டூம், மார்ச்7

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் கைது செய்யப்படுவதற்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள சூடானிய ஜனாதிபதி ஒமர் அல்-பஷீர், ஆயிரக்கணக்கான தமது ஆதரவாளர்கள் மத்தியில் நடனமாடிக் களித்தார்.

சூடானிய டாபூர் பிராந்திய படு



கொலைகள் தொடர்பாக ஒமர் அல்-பஷீரைக் கைது செய்வதற்கான பிடியாணை, புதன்கிழமை ஹேகுவிலுள்ள ஐ.நா. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது.

இப்பிடியாணைப் பிறப்பிப்புக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்தும், ஜனாதிபதி ஒமர் அல்-பஷீருக்கு ஆதரவு தெரிவித்தும், தலைநகரான கார்ட்டூமில் வியாழக்கிழமை மாபெரும் பேரணி நடத்தப்பட்டது. இதில் பல்லாயிரக் கணக்கான ஆதரவாளர்கள் வெகு உற்சாகத்தோடு கலந்துகொண்டார்கள்.

கார்ட்டூமின் கீழ் நகர மாவட்டத்தில் நடைபெற்ற இப்பேரணியில், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஜனாதிபதி ஆதரவாளர்கள் பங்குபற்றியிருந்தார்கள் என ஊடகவியலாளர்கள் மதிப்பீடு செய்துள்ளார்கள்.

''ஜனாதிபதி ஒமர் அல்-பஷீர் மக்கள் மத்தியில் உரையாற்றுகையில், சர்வதேச குற்றவியல் நீதிமன்ற பிடியாணை குறித்து எள்ளி நகையாடினார். ''மேற்கத்தேய தலைவர்களே உண்மையான - படுபாதகமான குற்றவாளிகள். இதுதான் உண்மை'' என அவர் சாடினார்.

''அமெரிக்காவினதும், ஐரோப்பாவினதும் தலைவர்களே உண்மையான குற்றவாளிகள். உலகறிந்த பாதகர்கள். இது மூடு மந்திரமான இரகசியமல்ல. உலக அரங்கை ஆட் கொண்டுள்ள அப்பட்டமான உண்மை'' என அவர் கூறியதும், கூட்டத்தினர் பலத்த கரகோஷம் செய்தனர்.

''அமெரிக்காவின் பூர்வீகக் குடிகளான செவ்விந்தியர்களை அமெரிக்கா கொன்று குவித்துள்ளது. இது அதிபயங்கரமான ஓர் இனப் படுகொலையாகும். இதுபோல அமெரிக்கா வியட்நாமியர்களை, வகை தொகை இன்றிக் கொன்று குவித்துள்ளது'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

''1945 ஆம் ஆண்டு, ஜப்பானிய ஹிரோஷிமா மீது அணுகுண்டுத் தாக்குதலை அமெரிக்கா மேற்கொண்டது. பல்லாயிரக் கணக்கானோர் மடிந்தனர். இதன் கதிரியக்கத்தின் தாக்கம் இன்னும் நீங்கவில்லை. இதனால், நிரந்தர நோயாளர்களாகவும், அங்கவீனர்களாகவும் குழந்தைகள் பிரசவிக்கப்படுகின்றார்கள். இந்தப் படுகொலைகளை உலக வரவாற்றிலிருந்து நீக்கி விடமுடியாது'' என்றும் அவர் தம் உரை யில் விவரித்தார்.



''அணுகுண்டால் அமெரிக்கா இவ்வாறு மனித குலத்தை அழித்துள்ளது. இந்த குற்றவாளிகளை நாம் விட்டுவைக்க மாட்டோம். என்றோ ஒரு நாள் இவர்களையும் நீதிக்கு முன் நிறுத்துவோம்'' என்றும் அவர் சூளுரைத்தார்.

''சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் என்னைக் கைது செய்ய பிடியாணை பிறப்பித்துள்ளது. அதன் வழக்குத் தொடுநர் லூயிஸ் மொரினோ- ஒகம்போ இதற்கு வழிசமைத்துள்ளார். இப்பிடியாணை சூடானிய மக்களை ஒருங்கிணைத்துள்ளது. எனக்கு ஆதரவாக ஆயிரக்கணக்கான மக்களை வீதிகளில் திரட்டியுள்ளது. அதற்காக வழக்குத் தொடுநருக்கு நன்றி தெரிவிக்கின்றேன்'' எனக் குறிப்பிட்ட அவர், நடனமாடினார்.

சூடானிய ஜனாதிபதி ஒமர் அல்-பஷீர், தம் கைக்கம்பை இலாவகமாக சுழற்றியவாறு நடனமாடினார். பலர் ஆதரவுக் கீதங்கள் இசைத்தனர். ஏனையோர் கைகளைத் தட்டி உற்சாகமூட்டினர். பேரணியில் மற்றும் அநேகரும் நடனமாடி குதூகலித்தனர்.

பெண்களைக் கொண்ட குழுவொன்று, ''ஒழிக ஒகம்போ, ஒழிக ஒகம்போ''எனக் கோஷிமிட்டனர். கூடியிருந்த பாடசாலை மாணவர்கள், ''அமெரிக்கா ஒழிக'' எனக் கோஷமெழுப்பினார்கள்.

ஒமர் அல்-பஷீர் மீள உரையாற்றுகையில், ''மேற்கத்தேய நாடுகள் நவீன காலனித்துவத்தைப் பரப்ப முனைந்துள்ளன. மனிதநேய தொண்டு அமைப்புகள் என்ற போர்வையில், சூடானுக்குள் மேற்கத்தேய உளவாளிகள் ஊடுருவி விட்டார்கள். இவர்களுக்கு உடனடி வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கத்தேய உளவாளிகள் எமக்குத் தேவையில்லை'' என்றார்.

# காந்தியின் பொருள்களை ஏலத்தில் வாங்கினார் இந்தியத் தொழில் அதிபர்

மகாத்மா காந்தி பயன்படுத்திய உடைமைகளை தொழிலதிபர் விஜய் மல்லையா ஒரு கோடியே 80 இலட்சம் டொலர் கொடுத்து வாங்கியுள்ளார். மகாத்மாவின் உடைமைகள் ஏலம் விடப்படாதவாறு தடுத்து நிறுத்த இந்திய மத்திய அரசு கடும் முயற்சி மேற்கொண்டது. எனினும், அது தோல்வியில் முடிந்ததால் நாட்டுக்காக தாம் ஏலத்தில் பங்கேற்று அவற்றை வாங்கினார் என மல்லையா கூறினார்.

ஏலத்துக்கு சற்று முன்னதாக மகாத்மாவின் உடைமைகளை வைத்திருந்த ஜேம்ஸ் ஓடிஸ் என்பவர் ஏலத்திலிருந்து தனது பொருள்களை தான் வாபஸ் பெறப் போகிறார் எனத் தெரிவித்தார். எனினும், ஏல நிறுவனம் அதை ஒப்புக்கொள்ள வில்லை. 30 இற்கும் மேற்பட்ட ஏலதாரர்கள் தங்களிடம் ஏற்கனவே பதிவு செய் துள்ளனர். சிலர் எழுத்து மூலமாக பங் கேற்க உள்ளனர் என அந்த ஏல நிறுவனம் வாதிட்டது.

காந்தியின் உடைமைகளை மல்லையா வாங்கியிருந்தாலும் விற்பனையை இறுதி செய்ய இரண்டு வாரங்கள் ஆகும் எனத் தெரிகிறது. அதுவரை அந்த பொருள்கள் ஏலதாரரிடமே இருக்கும்.

மல்லையா சார்பில் ஏலத்தில் பங்கேற்ற டோனி பேடி, நாட்டுக்காக ஏலத்தில் தான் பங்கேற்றார் எனத் தெரிவித்தார். இந்த விற்பனையின் மூலம் காந்தியின் பொருள்கள் இப்போது இந்தியாவுக்குத் திரும்ப உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஏலம் தொடங்கிய மூன்று நிமிடங்களில் ஏலத் தொகை 10 இலட்சம் டொலரை அடைந்தது. அதன் பின்னர் மெதுவாக ஒரு கோடியே 80 இலட்சம் டொலரை நெருங்கியது. பின்னர் நீண்ட நேரம் யாரும் ஏலம் கேட்காததால் ஏலம் ஒரு கோடியே 80 லட்சம் டொலருக்கு இறுதி செய்யப்பட்டது.

## பாக். முன்னாள் ஜனாதிபதி இந்தியாவுக்கு திடீர் விஜயம்

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வீஸ் முஷாரப் நேற்று வெள்ளிக்கிழமை பத்திரிகை நிறுவனம் ஒன்று நடத்தும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்திய விஜயத்தை மேற்கொண்டார்.

திபெத் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா, காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, ஹொலிவுட் நடிகர் ஷாருக்கான் ஆகியோரையும் முஷாரப் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

கடந்த ஆண்டு மும்பையில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் இந்தியா, பாகிஸ்தான் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இச்சம்பவத்துக்குப் பின்னர் தற்போதுதான் முதன்முறையாக பாகிஸ்தான் தலைவர் ஒருவர் இந்திய விஜயத்தை மேற்கொள்கிறார்.

# கிரிக்கெட் அணி தாக்கப்பட்டமைக்கு பாதுகாப்புக் குறைபாடே காரணம்

## பாக். பொலிஸ் ஆணையாளர் ஒப்புதல்

இஸ்லாமாபாத், மார்ச் 7

பாகிஸ்தானில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பாதுகாப்பு குறைபாடுதான் காரணம் என பாகிஸ்தான் ஒப்புக் கொண்டுள்ளது.

வீரர்கள் சென்ற பஸ்ஸுக்குப் பாதுகாப்பாகச் சென்ற வாகனங்களின் எண்ணிக்கையும், பொலிஸாரின் எண்ணிக்கையும் போதுமானதாக இருக்கவில்லை என லாகூர் நகர பொலிஸ் ஆணையாளர் குஸ்ரோ பர்வீஸ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் 'டான்' பத்திரிகைக்கு இது குறித்து அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு :-

''இலங்கை வீரர்கள் மீது தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளை எதிர்கொள்ள அந்த இடத்தில் போதுமான அளவுக்கு பொலிஸார் இருக்கவில்லை. இந்த காரணத்தால் தான் பொலிஸாரில் பலர் உயிரிழந்துள்ளனர்.

''பல நாடுகள் பாகிஸ்தானுக்கு விளையாட வர மறுத்த சூழ்நிலையில் இலங்கை கிரிக்கெட் அணி பாகிஸ்தான் வந்தது. வீரர்களுக்கு ஜனாதிபதிக்கு இணையான பாதுகாப்பு வழங்கப்படும் என இலங்கை அரசுக்கு பாகிஸ்தான் உறுதியளித்தது. ஆனால், அதிமுக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்ற நிலையில் உள்ளவர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பே வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

''தாக்குதல் சம்பவம் நடந்த இடத்துக்கு மிக அருகே லாகூர் தலைமைக் காவல் நிலையம் உள்ளது. எனினும், தாக்குதல் நிகழ்ந்து சுமார் 20 முதல் 30 நிமிடங்கள்வரை அங்கு பாதுகாப்புக்கு எவரும் வர வில்லை. இதை ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும்.

''வீரர்களைப் பாதுகாப்பதிலும், அவர்களைப் பத்திரமாக மீட்டு பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு செல்வதிலும்தான் பொலிஸார் அதிக கவனம் செலுத்தினர். தீவிரவாதிகளை எதிர்த்துத் தீவிரமாக போரிடவில்லை. எனவேதான் தீவிரவாதி எவரும் பிடிபடவில்லை'' -இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

லாகூரில் கடந்த செவ்வாய்க்கிழமை, பஸ்ஸில் சென்றுக்கொண்டிருந்த இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது தீவிரவாதிகள் ரொக்கெட் குண்டுகள், துப்பாக்கிகள் மூலம் தாக்குதல் நடத்தினர். இதில் அதிர்ஷ்டவசமாக சிறுகாயங்களுடன் வீரர்கள் உயிர்தப்பினர்.

# நிரந்தர உறுப்பினர்களை அதிகரிக்குமாறு ஐ.நா.சபையிடம் இந்தியா கோரிக்கை

நியூயோர்க், மார்ச் 7

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கையை உடனடியாக அதிகரிக்க வேண்டும் என இந்தியா வலியுறுத்தியது. இத்தகைய நடவடிக்கையை எடுக்காமல் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சீர்திருத்தமும் பயனளிக்காது என்றும் இந்தியா உறுதிபடத் தெரிவித்தது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தற்போது மொத்தம் 15 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், சீனா ஆகிய 5 நாடுகள் வீட்டோ அதிகாரத்துடன் நிரந்தர உறுப்பு நாடுகளாக அங்கம் வகிக்கின்றன. நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளாக 10 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. நிரந்தரமற்ற உறுப்பு நாடுகள் ஐ.நா.உறுப்பு நாடுகளால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்துவது தொடர்பாக உறுப்பு நாடுகளுக்கிடையே அதிகாரபூர்வமற்ற விதத்திலான விவாதம் ஐ.நா. சபையில் புதன்கிழமை தொடங்கியது. ஐ.நாவுக்கான இந்தியத் தூதர் நிருபம் சென் இந்த விவாதத்தில் பங்கேற்றுப் பேசியவை வருமாறு:-

''இடைக்கால ஏற்பாடாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை மட்டும் உயர்த்தலாம் என்ற யோசனையை ஏற்க முடியாது. ஏனெனில், நிரந்தர மற்றும் நிரந்தர மற்ற உறுப்பு நாடுகள் ஆகிய இரு பிரிவுகளிலும் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பதை ஐ.நாவில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான நாடுகள் ஆதரிக்கின்றன.

''ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் மேற்கொள்ளப்படும் எந்தச் சீர்திருத்தமும் பயனளிக்காது.

''இரண்டு பிரிவுகளிலும் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது சாத்தியமல்ல என்றும், இடைக்கால ஏற்பாடாக நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை மட்டும் உயர்த்தலாம் என்றும் சில நாடுகள் மட்டும் [illegible] நாடுகளின் இந்த வாதம் அபத்தமானது. ஏனெனில், இந்த வாதத்தை பெரும்பாலான நாடுகள் ஏற்கவில்லை.

''21 ஆம் நூற்றாண்டின் உண்மை நிலையைப் பிரதிபலிக்கும் வகையில், 15 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா. பாதுகாப்புச் சபை செயற் படவில்லை என்பது ஒருமித்த கருத்தாக உள்ளது. ஐ.நா. உறுப்பு நாடுகளில் பெரும்பாலானவற்றுக்கு பாதுகாப்புச் சபையில் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை.

''ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளுக்கான ஏற்பாடு இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய சூழ்நிலையில் உருவாக்கப்பட்டதாகும். இன்றைய காலகட்டத்தின் உண்மையான நிலைவரத்தை பிரதிபலிக்கும் விதத்திலோ அல்லது பெருவாரியான நாடுகளுக்குப் பிரதிநிதித்துவம் அளித்து சிறப்பாகச் செயற்படும் விதத்திலோ இல்லாமையால் இந்த ஏற்பாட்டை தொடருவது சரியல்ல.

''1965 ஆம் ஆண்டில் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளின் [illegible] அதிகரிக்கப்பட்டது. இந்த [illegible]க்கையால் எந்த மாற்றமும் நிகழவில்லை. ஏனெனில், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் முக்கிய முடிவுகள் எடுக்கும் அதிகாரம் நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளுக்கு இல்லை. எனவே, நிரந்தரமற்ற உறுப்பு நாடு எண்ணிக்கையை உயர்த்துவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை'' - இவ்வாறு நிருபம் சென் உரையாற்றினார்.

இரண்டாம் உலகப் போரில் வெற்றி பெற்ற அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், சீனா ஆகிய 5 நாடுகள் தாம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகளாக உள்ளன. ஆனால், தற்போது ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டுமானால், மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் இதற்கு ஆதரவளிக்கவேண்டும்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை 5 இருந்து 11 ஆகவும், நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை 10 இலிருந்து 14 ஆகவும் உயர்த்த வேண்டும் என இந்தியா வலியு றுத்தி வருகிறது -என்றார்.

உலக அரங்கில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மத்திய அரசையும் உலக நாடுகளையும் மீறி

# ஈழத் தமிழரைக் காக்க வேண்டுமானால் காங்கிரஸ் கூட்டணியைத் தோற்கடிக்குக!

## விண் அதிர முழக்கமிடுகிறார் வைகோ

மத்திய அரசு, இலங்கைத் தமிழர்களை முழுவதுமாக அழித்துவிடுவதற்குள் உலக நாடுகளையும், மத்திய அரசையும் மீறி போரை நிறுத்துவதற்கு இரண்டு விதமான காரியங்களைச் செய்யலாம். ஒன்று வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி கூட்டணியை 40 இடங்களிலும் தோற்கடிக்க வேண்டும். இரண்டு மத்தியில் காங்கிரஸ் அல்லாத வேறு எந்தக் கட்சியையும் ஆட்சியில் அமர வைக்கலாம் - என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ முழக்கமிட்டுள்ளார்.

திருச்சியில் இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் நேற்றுமுன்தினம் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் பேசியபோதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

தமிழீழம் மலர்வதற்காக முத்துக்குமார் முதல் ஸ்ரீதரன் வரை 9 பேருக்கு இதுவரை கருணாநிதி இரங்கல் அஞ்சலி செலுத்தாதமை ஏன்? அவர்கள் குடும்பப் பிரச்சினைக்காகவே இறந்தனர் எனக் கொச்சைப்படுத்துகிறார்கள். பொலிஸை வைத்து அவர்களைக் களங்கப் படுத்துகிறார்கள். இவர் இப்படி செய்வது தன்னுடைய வாரிசுகளுக்குக் கொடுக்கப்போகும் பதவிகளுக்கு ஆபத்து வந்துவிடும் என்பதற்காகத்தான். இதை 65இல் முதல்வராக இருந்த பக்தவச்சலம் கூடச் செய்யவில்லை.

இந்தியா தனது சொந்தப் பணத்தில் பாலாலி விமான நிலையத்தைத் திருத்திக் கொடுத்தது என பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. அந்த விமான நிலையத்தை வைத்துத்தான் செஞ்சோலையில் 61 குழந்தைகளை குண்டு மழை பொழிந்து கொன்றது.



இது சோனியாவும் ராஜபக்ஷவும் சேர்ந்து செய்த சதி என்று குற்றம் சாட்டுகிறேன்.

இலங்கைக்கு இஸ்ரேலும் ஈரானும் எதிர் எதிர் நாடுகளாக இருந்தாலும், ஆயுதங்களை தொடுத்து வருகிறது. அங்கே இளம் தமிழ்ப் பெண்கள் மானபங்கப் படுத்தப்படுகிறார்கள். ஆரோக்கியமான இளைஞர்களை காடுகளுக்குள் அழைத்துச் சென்று கொலை செய்து அவர்களின் உடல்கள் சிதறடிக்கப்படுகின்றன.

ஹிட்லர் காலத்தில் கூட இந்த மாதிரிக் கொடுமைகள் நிகழ்த்தப்படவில்லை. இது உலக நாடுகளின் கண்களுக்குத் தெரியவில்லையா? ஏன் குருடாகிக் கிடக்கிறது. சிங்கள இராணுவத்திற்கு ஆயுதங்கள் கொடுக்கவில்லை என்று பிரணாப் முகர்ஜியும், தமிழக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சுதர்சன நாச்சியப்பனும் சொல்லித் திரிகிறார்கள்.

ஆனால் என்னிடம் ஆதாரங்கள் இருக்கின்றன. இலங்கை இராணுவத்துக்கு இந்தியா ஆயுதம் கொடுத்தது என மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான பத்திரிகையில் 2006 ஓகஸ்ட் 6இல் வெளிவந்திருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமானால் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கையில் தேசிய ஒருமைப்பாடைக் காப்பாற்றுவதற்காக ஆயுதங்களை வழங்கினோம் என்று ஒப்புதல் கடிதத்தை வழங்கியுள்ளார்.

பிரணாப் முகர்ஜி முல்லைத்தீவில் 70 ஆயிரம் பேரே இருக்கின்றனர் எனப் பொய் சொல்லுகிறார். ஆனால் அங்கு மூன்றரை லட்சம் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஒட்டு மொத்தமாகக் குண்டு வீசி, கொலை செய்யச் சதித் திட்டம் தீட்டுகிறார்கள். இந்திய அரசால் அனுப்பப்பட்ட 80 சதவீத நிவாரண பொருள்கள் அனைத்தும் சிங்கள இராணுவ வீரர்களுக்கே பயன்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய அரசு, இலங்கைத் தமிழர்களை முழுவதுமாக அழித்துவிடுவதற்குள் உலக நாடுகள், மத்திய அரசை மீறி போரை நிறுத்துவதற்கு இரண்டு விதமான காரியங்களைச் செய்யலாம். ஒன்று வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி கூட்டணியை 40 இடங்களிலும் தோற்கடிக்க வேண்டும். இரண்டு மத்தியில் காங்கிரஸ் அல்லாத வேறு எந்தக் கட்சியையும் ஆட்சியில் அமர வைக்கலாம்.

நாங்கள் வெளிநாட்டு தூதரகங்களில் தொடர்ந்து போரை நிறுத்த வலியுறுத்தி கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறோம். அதேபோன்று பொதுமக்களும் இரண்டு கோடி, மூன்று கோடி என கையெழுத்து இயக்கம் நடத்தி உலகத் தலைவர்களுக்கு கோரிக்கை வையுங்கள் - என்றார்.

## சீமான், கொளத்தூர்மணி மீதான வழக்கை எதிர்த்து மேல் முறையீடு

### நெடுமாறன் தெரிவிப்பு

மதுரை, மார்ச் 07

விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசினர் என இயக்குநர் சீமான், பெரியார் திராவிட இயக்க மாநிலத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோரைக் கைது செய்ததை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும் என பழ.நெடுமாறன் கூறியுள்ளார்.

மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள கொளத்தூர் மணியை வியாழக்கிழமை சிறையில் பார்த்துப் பேசிய பழ.நெடுமாறன், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

என்னையும், வைகோ உள்ளிட்டோரையும் இதேபோல கைது செய்த வழக்கில், புலிகளை ஆதரித்துப் பேசியதில் தவறில்லை என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எனவே, நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காமல் தற்போது சீமானும், கொளத்தூர் மணியும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீதான வழக்கை திரும்பப் பெறாவிடில், உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும் - என்றார்.



சட்டத்தரணிகள் கறுப்புக்கொடி ஏந்திப் போராட்டம் நடத்தியபோது...,...

# உண்ணாவிரதப் போராட்டம் வரும் 9ஆம் திகதிக்கு மாற்றம்

## ஜெயலலிதா அறிவிப்பு



சென்னை, மார்ச். 07

இலங்கைத் தமிழர்களுக்கு முழுமையான ஆதரவை வெளிப்படுத்துகின்ற வகையில் அ.தி.மு.க. சார்பில் 10ஆம் திகதி நடத்தபடவிருந்த உண்ணாவிரதப் போராட்டம் 9 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது - என்று அக்கட்சியின் செயலர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்காத மத்திய அரசை கண்டித்தும், அதற்கு உறுதுணையாக இருந்து வரும் தி.மு.க. அரசை கண்டித்தும், இலங்கையில் உடனடி போர் நிறுத்தம் ஏற்பட நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியும், இலங்கை தமிழர்களுக்கு முழுமையான ஆதரவை வெளிப்படுத்துகின்ற வகையிலும் அ.தி.மு.க. சார்பில் 10ஆம் திகதி (செவ்வாய்க் கிழமை) அன்று கழக அமைப்பு ரீதியாக செயற்பட்டு வரும் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்று அறிவித்திருந்தேன்.

இந்த நிலையில் அன்றைய தினம் சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதற்கு காவல்துறை அனுமதி மறுத்து விட்ட நிலையில் மேற்படி உண்ணாவிரத அறப் போராட்டம் 9ஆம் திகதி (திங்கட்கிழமை) சென்னை மாநகரிலும், கழக அமைப்பு ரீதியாகச் செயற்பட்டு வரும் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் புதுச்சேரி மாநிலத்திலும் நடைபெறும்.

சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்கள் மேற்கண்டவாறு உரிய ஏற்பாடுகளை செய்து உண்ணாவிரதப் போராட்டத்தைச் சிறப்பான முறையில் நடத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் - என்றேன்.

# பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி சட்டத்தரணிகள் கறுப்புக்கொடிப் போராட்டம்

சென்னை, மார்ச் 07

பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் உண்ணாவிரதப் பந்தலில் கறுப்பு கொடி ஏந்திப் போராட்டம் நடத்தினர்.

சென்னை உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் போராட்டம் நேற்றுமுன்தினம் 11ஆவது நாளை எட்டியது. நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் சார்பில் உண்ணாவிரதப் பந்தலில் சட்டத்தரணிகள் தங்கள் கைகளில் கறுப்புக்கொடி ஏந்தி பொலிஸாருக்கு எதிராக கோஷமிட்டனர். தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பதிலளிக்கவேண்டும் என்று முழங்கினர். உண்ணாவிரதப் பந்தலில் அனைத்து சட்டத்தரணிகளும் உறுதிமொழி எடுத்து கொண்டனர்.

சட்டத்தரணிகளாகிய நாங்கள் சாதி, மதம், இனம் வேறுபாடின்றி, கட்சி பாகுபாடின்றி, எங்கள் நீதியின் மேன்மையையும், மாட்சிமையையும் சீரிய முறையில் செயல்படுத்துவோம் என்று உறுதியளிக்கிறோம். மேலும், எங்களுக்கு நியாயம் கிடைக்கும் வரையில் ஜனநாயக முறைப்படி தொடர்ந்து போராட்டம் நடத்துவோம். எனவே, எங்கள் நியாயமான கோரிக்கைகளுக்கு உடனடியாக நீதி வழங்கப்பட வேண்டும் - என்று உறுதி மொழி எடுத்தனர்.

சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் போல் கனகராஜ் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

சட்டத்தரணிகள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து இன்றுடன் 11ஆவது நாள் ஆகிறது. ஆனால், நம்மிடையே போராட்டம் ஆரம்பித்த அன்று இருந்த துடிப்பும், வேகமும் இன்றும் இருந்து வருகிறது. இது நமது வெற்றிக்கு வழி வகுக்கும். நீதி கிடைக்கும் வரை நமது போராட்டம் தொடரும்.

அரசு தரப்பு சட்டத்தரணிகள் சிலர் அரசியல் ஆதாயம் தேடி நீதிமன்றுக்குச் சென்றுள்ளனர். அவர்களின் பெயர்கள் நோட்டீஸ் பலகையில் எழுதப்படும்.

அவர்கள் அனைவரும் இன்றிலிருந்து மாமன்ற அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்படுவார்கள். அவர்கள் வேறு எந்தச் சங்கத்தில் இருந்தாலும் அதில் இருந்தும் நீக்கப்படுவார்கள். இனி இவர்கள் எந்த சங்கத்திலும் சேரமுடியாது - என்றார்.

## இந்தியச் செய்திகள்


# ஜெயலலிதாவின் உண்ணாவிரதத்திற்கு கம்யூ. ஆதரவு என்கின்றார் பாண்டியன்

சென்னை, மார்ச் 07

இலங்கைத் தமிழருக்காக அ.தி.மு.க. சார்பில் விடப்பட்டுள்ள உண்ணாவிரத அறிவிப்பை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி முழு மனதோடு வரவேற்பதோடு, இப்போராட்டத்திற்கு முழு ஒத்துழைப்பும் ஆதரவும் தரும் - இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

அ.தி.மு.க. பொதுச்செயலரும், முன்னாள் முதல்வருமான ஜெயலலிதா, போரை நிறுத்த வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டம் நடத்த



அழைப்பு விட்டதோடு, தானும் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்பதாக அறிவித்திருப்பது, கொடுமைக்கு ஆளாகி உயிருக்காகப் போராடி வரும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆறுதலையும், இந்தியத் தமிழர்களுக்கு ஊக்கத்தையும், மகிழ்ச்சியைத் தருவதாக இருப்பதால் இப்போராட்ட அறிவிப்பை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி முழு மனதோடு வரவேற்பதோடு, இப்போராட்டத்திற்கு முழு ஒத்துழைப்பும் ஆதரவும் தரும் - என்றுள்ளது.

# தமிழக மீனவர் மீது தாக்குதல் வலைகளை கடலில் வீசினர்

இராமேஸ்வரம், மார்ச் 07

நடுக்கடலில் விசைப்படகில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்களின் மீன்பிடி வலைகளை இலங்கைக் கடற்படையினர் வெட்டி கடலில் வீசினர். இதனால் மீனவர்களுக்கு ரூபா ஒரு லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது எனத் தமிழக நாளேடு தெரிவித்துள்ளது.

இராமேஸ்வரத்திலிருந்து புதன்கிழமை சுமார் 600 விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர்.

அவர்கள் இந்திய - இலங்கைக் கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர் இராமேஸ்வரம் சேதுராமன் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகைப் பிடித்தனர்.

படகில் இருந்த மீனவர்களைக் கயிற்றால் தாக்கினர். இறால் மீன், பற்றரி லைட், கடிகாரம் போன்றவற்றை பறித்தனர்.

மீன்பிடி வலைகள், பலகைகளை வெட்டி கடலில் மூழ்கடித்தனர். மீனவர்கள் தொடர்ந்து மீன்பிடிக்க முடியாததால், வெறும் படகுடன் கரைக்குத் திரும்பினர்.

# ஜெயலலிதாவின் கனவு பலிக்காது

## கருணாநிதி அறிக்கை

சென்னை, மார்ச் 07

நான் நிரந்தர ஓய்வுபெற நினைப்பதும், அதன் காரணமாக ஆட்சிக்கு வரலாம் என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கனவு காண்பதும் நடக்கவே நடக்காது - என்று கருணாநிதி திட்டவட்டமாகக் கூறி யுள்ளார்.

அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதே கருணாநிதிக்கும், தமிழகத்துக்கும் நல்லது என்று ஜெயலலிதா புதன்கிழமை கூறியிருந்தார். அதற்குப் பதிலளித்து நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அதில் -

13ஆவது வயதில் இருந்து இன்று 85ஆவது வயது வரையில் எழுதுகிறேன், எழுதுகிறேன் - எழுதிக் கொண்டே இருக்கிறேன். களைப்பில்லாமல் கடுமையான அரசியல் பணி புரிந்து, சட்டபேரவை பொன்விழா கொண்டாடியுள்ளேன்.

தமிழகப் பண்பாட்டுச் சின்னங்களாக, வள்ளுவர் கோட்டம், குமரி முனையில் வள்ளுவர் சிலை, தமிழ் கட்டாயப் பாட மொழியாக அறிவிப்பு என பல்வேறு செயல்களை மேற்கொண்டு, அடித்தட்டு மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்கள் என பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன

இத்தனை சாதனைகளையும், ஏற்றுக் கொண்ட கொள்கைகளின் வன்மையாலும், எண்ணத்தின் செயற்பாட்டினாலும் நிறைவேற்றி வருகிறேன்.

எனினும், இத்தனை சாதனைகளையும் அழிக்கத் துடிக்கும் ஒரு பெண்மணியிடம் தமிழகத்தை விட்டுவிட்டு, நான் நிரந்தர ஓய்வு பெறுவதா என்று தான் எண்ணுகிறேன். நான் நிரந்தர ஓய்வு பெற நினைப்பதும், அதன் காரணமாக, அவர் ஆட்சிக்கு வரலாம் என கனவு காண்பதும், நடக்கவே நடக்காது - என்றுள்ளது.

# இலங்கைப் போருக்குத் துணை நிற்கும் இந்திய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் நகரத்தில் நேற்றுமுன்தினம் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை அனைத்துக் கல்லூரி மாணவர்களும் இலங்கை அரசுக்கு துணை நிற்கும் இந்திய அரசைக் கண்டித்து தொடர் முழக்கப் போராட்டம் நடத்தினர்.

கும்பகோணம் காந்தி பூங்கா எதிரில் மாவீரன் முத்துக்குமார் அரங்கத்தில் காலை 10 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கியது. மாணவர் ஒருங்கிணைப்பாளர் தியாகவேந்தன் தலைமை தாங்கினார். தமிழ் செயப்பாண்டியன் வரவேற்புரை ஆற்றினார். பல்வேறு அரசியல் சமூக அமைப்புகளைச் சார்ந்த தலைவர்கள் கலந்து கொண்டு ஈழப்பிரச்சினையில் இந்திய அரசின் நிலையை கண்டித்து உரையாற்றினர்.

தமிழ் தேசிய பொதுஉடைமை கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பெ.மணியரசன் ஈழ விடுதலையின் அவசியம் மற்றும் நியாயத்தை எடுத்துக்காட்டி விளக்க உரையாற்றினார். இளஞ்சிறுத்தைகள் எழுச்சி பாசறை சார்ந்த குடந்தை அரசன் தமிழ்நாடு குடியுரிமை பாதுகாப்பு நடுவம் சட்டத்தரணிகள் மற்றும் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

ஈழ விடுதலையை ஆதரித்துப் பேசிய இனமான இயக்குநர் சீமான் மீது போடப்பட்ட தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ரத்துச் செய்யக் கோரியும், பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணியை விடுதலை செய்யக் கோரியும் தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் நகரத்தில் சட்டத்தரணிகள் மற்றும் மாணவர் அமைப்புகளின் சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விவகாரம் குறித்து ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம் கொண்டுவருவது மிக அவசியம்

## நோபல் பரிசுபெற்ற பேராயர் டெஸ்மண்ட் டுட்டு வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 7

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தீர்மானமொன்றை கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு தென்னாபிரிக்க அங்கிலிகன் பேராயரும் நோபல் பரிசு பெற்றவருமான டெஸ்ட் மண்ட் டுட்டு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பிரிட்டிஷ் அரசுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மோதலில் தொடர்புபட்டுள்ள அனைத்து தரப்பினரும் மனித உரிமை துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவதை முடிவிற்கு கொண்டு வருவதற்கும் பொது மக்களை காப்பதற்கும் மோதல்களில் சிக்கியுள்ள மக்கள் குறித்து ஐக்கிய நாடுகளின் அக்கறையை வெளிப்படுத்தவும் பாதுகாப்புச் சபை விடயத்தில் உடனடியாக செயற்படுவது அவசியம் என டெஸ்ட் மண்ட் டுட்டு தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் மண்ட் டுட்டு தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் ஆதரவுடன் விவரம் அறியும் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்புவதை நோக்கமாக கொண்டு பாதுகாப்புச் சபையில் இலங்கையின் வடபகுதி நிலைவரம் தொடர்பாக தீர்மானமொன்றை கொண்டு வருவதற்கான அழுத்தத்தை கொடுக்கும்படி பிரிட்டிஷ் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மோதல் தவிர்ப்பு மற்றும் தீர்வுக்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கான அவசியத்தை பிரிட்டிஷ் அரசு அங்கீகரிக்க வேண்டும்.

இலங்கையின் வடக்கு - கிழக்கில் மோசமடையும் மனித உரிமை மனிதாபிமான நிலைமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை உடனடி கவனத்தை செலுத்த வேண்டும் - நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஆயுத மோதல்கள் காரணமாக பரந்துப்பட்டளவில் இப்பகுதியில் கடுமையான மனித உரிமை துஷ்பிரயோகங்கள் நடந்துள்ளன.

இரு தரப்பையும் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதிக்குமாறும் விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் செவிமடுக்கப்படவில்லை.

இலங்கை அரசு, சுதந்திர கண்காணிப்பாளர்கள் மீது விதித்துள்ள தடைகள் காரணமாக பொது மக்களின் நிலைமை குறித்து சரியான தகவல்கள் கிடைக்கவில்லை.

மீதமுள்ள ஒரு சில கண்காணிப்பாளர்கள் ஒரு மாதக் கால பகுதியில் 2000 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்கின்றனர். எனவே இவை குறித்தும் நடவடிக்கை எடுக்கவேண்டும். (அ-சி)

## ஏறாவூரில் துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் பலியானார்

மட்டக்களப்பு, மார்ச் 7

மட்டக்களப்பு, ஏறாவூர் ரயில் நிலையத்திற்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஒருவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

உயிரிழந்தவரின் சடலத்திற்கு அருகில் இருந்து பிஸ்டல், சயனைட் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டன என்று பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

உயிரிழந்தவரின் சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (க-10)

## நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோருக்கு உதவுமாறு இந்து அமைப்புகளுக்கு வேண்டுகோள்

யாழப்பாணம், மார்ச் 7

யாழ். மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்து வந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவிகள் வழங்க இந்து அமைப்புகள், தர்மகர்த்தா சபைகள், இந்து சமய அமைப்புகள், பொது அமைப்புகள் முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டுக்கு வரும் மக்களுக்கு உதவிகள் வழங்குவது தொடர்பாக ஆராய்வதற்காக நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் நேற்று முன்தினம் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தின் பின்னர் இந்துசமயப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் நடைபெற்ற இந்து சமய அமைப்புக்களின் ஒன்றியக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ் மாவட்டத்தில் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு மாவட்டச் செயலகத்தினாலும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் வழங்கப்படும் உதவிகளுக்கு மேலதிகமாக உதவிகள்தேவைப்படுவதால் அவற்றை அரசாங்க அதிபர் ஊடாக வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்து ஆலயங்கள், தர்மகர்த்தா சபையினர், இந்து சமய அமைப்புகள், பொது அமைப்புகள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு பொதுமக்களிடமிருந்தும் நன்கொடைகள் எதிர்பார்க்கப் படுகின்றன.

இரக்கசிந்தை உள்ள நன்கொடையாளர்கள் இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதியில் உள்ள இந்து சமயப் பேரவை நடைமுறைக் கணக்கு இலக்கம் 8944876க்கு வைப்புச் செய்வதன் மூலம் அல்லது நேரடியாக பணத்தைக் கையளிக்க விரும்புவோர் இல.141, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவை அலுவலகத்தில் நேரடியாகக் கையளித்து பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்வதன் மூலம் இந்த நிதியத்துக்கு பங்களிப்புச் செய்யுமாறு இந்து சமய அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக் கொள்கிறது. - என்றுள்ளது. (அ-1)

## கச்சதீவு தேவாலய உற்சவத்துக்கு இங்கிருந்து பக்தர்கள் செல்லவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 7

கச்சதீவு சென் அன்ரனிஸ் தேவாலயத்தில் நேற்று ஆரம்பமாகவிருந்த வருடாந்த உற்சவத்துக்கு இலங்கையில் இருந்து பக்தர்கள் செல்ல வில்லை.

இந்த உற்சவத்தில் 50பேர் பங்குபற்ற பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக யாழ். அரச அதிபரால் நெடுந்தீவுப் பங்குத்தந்தை பேர்டினன் றோய் அடிகளாருக்கு தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலையே இத்தகவல் கிடைத்ததாலும் குறிப்பிடப்பட்ட 50 பேரைக் கொண்டு உற்சவ ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியாமையாலும் கச்சதீவுக்குச் செல்லும் ஏற்பாட்டைக் கைவிட்டுள்ளதாக பங்குத்தந்தை தெரிவித்தார் என நெடுந்தீவு உதவி அரச அதிபர் எஸ்.திருலிங்கநாதன் தெரிவித்தார்.

ஏற்கனவே உற்சவத்தில் பங்குகொள்ள 130பேர் தம்மிடம் பதிவு செய்தி[ருந்]தனர் என்றும் முழுமையாகப் பக்தர்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் பங்குத்தந்தை தெரிவித்தார்.

இதேவேளை -

இந்த உற்சவத்தில் இலங்கையில் இருந்து50 பேரும் இந்தியாவில் இருந்து 50பேரும் பங்குபற்றலாம் என்று பாதுகாப்பு அமைச்சு மட்டுப்படுத்தி உள்ளது என்று யாழ்.அரச அதிபர் அறிவித்திருந்தார். (அ-1-111)

## இப்போது 500 புலிகளே முல்லையில் மிச்சம்; இராணுவப் பேச்சாளர் நாணயக்கார சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 7

தற்போது முல்லைத்தீவில் 45 சதுர கிலோமீற்றருக்குள் 500 புலி உறுப்பினர்கள் மாத்திரமே எஞ்சியுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வன்னி மக்கள் பாதுகாப்பாக இடம்பெயர்ந்து வர வேண்டும் என்பதற்காக நாம் யுத்த சூனியப் பகுதியை உருவாக்கினோம். ஆனால், புலிகள் அந்தப் பகுதிகளில் ஷெல் தாக்குதல்கள் நடத்தி இடம்பெயர்ந்து வரும் மக்களைக் கொலை செய்கின்றனர்.

தற்போது இடம்பெயர்ந்து வரும் மக்களை பாதுகாப்பாக வர வைப்பதற்காக நாம் பாதுகாப்பான பாதைகள் பலவற்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். தற்போது முல்லைத்தீவில் 45 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் 500 புலி உறுப்பினர்கள் மாத்திரமே எஞ்சியுள்ளனர் - என்றார்.

## கலாபூஷண விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்7

கொழும்பில் நடை பெற்ற 2008 ஆம் ஆண்டுக்கான கலாபூஷண விருது வழங்கும் நிகழ்வில் பங்கு பற்றாதோருக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார்.

கதிர்காமு தம்பையா (புலோலி தெற்கு), நாகலிங்கம் புவனசுந்தரம் (வட்டுக்கோட்டை), சரோஜா தம்பு (நெல்லியடி, கரவெட்டி), தம்பிப்பிள்ளை யோகநாதன் (சங்கானை), செல்லையா சிவசாமி (நல்லூர்) ஆகியோருக்கே விருதுகள் வழங்கப் படவுள்ளன. (1-6)

## உறவினர்களின் பங்களிப்பின்றி சபையில் அநுரவுக்கு அனுதாபம்

கொழும்பு, மார்ச் 7

முன்னாள் சபாநாயகர் அநுர பண்டாரநாயக்கவிற்கான அனுதாப பிரேரணை நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்றபோது அவரது உறவினர்கள் எவரும் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்திருக்கவில்லை.

இது வழமைக்கு மாறான ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது. பொதுவாக மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அனுதாபப் பிரேரணை நாடாளுமன்றில் இடம்பெறும் போது அவர்களின் உறவினர்கள் நாடாளுமன்ற பார்வையாளர் கூடத்தில் ஒதுக்கப்பட்டுள்ள சபாநாயகரின் அதிதிகளின் இடத்தில் அமர்ந்து உறுப்பினர்களின் உரையை செவிமடுப்பர்.

ஆனால், அநுர பண்டாரநாயக்காவின் அனுதாபப் பிரேரணையின் போது உறவினர்கள் ஒருவரேனும் நாடாளுமன்றத்திற்கு வந்திருக்கவில்லை.

முன்னாள் சபாநாயகரின் அனு தாபப் பிரேரணை இங்கு நடைபெறும் போது இதில் கலந்துகொள்ள அவரது உறவினர்கள் வாராமையையிட்டு நான் மனவேதனைப்படுகிறேன் -என்று அமைச்சர் மனோ விஜயரட்ண அவரது இரங்கல் உரையின் போது கூறினார். (அ-சி)

## அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக ஐ.நா. உதவிகள் வழங்கப்படமாட்டா

### அமைச்சர் கெஹெலிய திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 7

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்துள்ள அகதிகளுக்கு ஐ. நா. உதவி செய்ய விரும்பினால் அந்த உதவியை இலங்கை அரசின் ஊடாக அன்றி அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாகச் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக உதவி செய்தால் இலங்கையின் இறைமைக்குப் பாதிப்பு ஏற்படும் என்றும் அந்த உதவி மக்களை முழுமையாக சென்றடையாது என்றும் அரசு மேலும் தெரிவித்துள்ளது.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த பாதுகாப்புப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெலவே இதைத் தெரிவித்தார்.

புலிகளின் பிடியில் இருந்து விடுபட்டு வவுனியா வருவதற்காக நாம் வன்னி மக்களுக்குப் பாதுகாப்பான பாதைகளை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களை வெளிநாட்டு இராஜதந்திரிகள் பார்வையிட்டனர். அவர்கள் திருப்திகரமான கருத்துகளை வெளியிட்டுள்ளனர் - என்றும் அமைச்சர் சொன்னார். (அ-சி)

## இந்திய வைத்தியர்கள் குழு அடுத்த வாரம் வருகிறது

கொழும்பு, மார்ச் 7

வன்னியில் மோதலில் சிக்கி காயமடைந்த பொதுமக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான இந்திய வைத்தியக் குழு அடுத்த வாரம் கொழும்பு வரவுள்ளது என இலங்கைக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை - இந்திய அரசுகள் ஏற்றுக்கொண்டபடி இந்திய மருத்துவக் குழு திங்கட்கிழமை வரவுள்ளது. இக்குழுவில் எட்டு வைத்தியர்கள், சத்திரசிகிச்சை நிபுணர்கள் அடங்கியிருப்பர் எனவும் திருகோணமலையின் புல்மோட்டையில் அவசர மருத்துவப் பிரிவு உருவாக்கப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் 7 கோடி ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்களை இலங்கை சுகாதார அமைச்சிடம் கையளிக்கவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.(அ-சி)

## கைதடி வைத்திய சாலையில் புதிய முகாம் அமைப்பு

வண்ணை,மார்ச் 7

கைதடி, அரசினர் வைத்தியசாலை வளாகத்தில் படையினர் புதிதாக மினி முகாம் ஒன்றை அமைத்து வருகின்றனர்.

கடல் நீரேரியை ஒட்டி அமைந்துள்ள வைத்தியசாலை வளாகத்தை பனை மரக் குற்றிகள் நிறுத்தி முட்கம்பிகளால் சுற்றி பாதுகாப்பு வேலிகள் போடப்பட்டுள்ளன.

உள்ளே படையினர் தங்குவதற்கான சிறுசிறு காவலரண்களும் தெட்டம் தெட்டமாக அமைக்கப்படுகின்றன. (1-180)

## தடைப்பட்ட குடிதண்ணீர் விநியோகம் வழமைக்கு

யாழ்ப்பாணம்,மார்ச் 7

யாழ் மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் கடந்த வியாழக்கிழமை முதல் தடைப்பட்டிருந்த குடிதண்ணீர் விநியோகம் நேற்று மாலையுடன் வழமைக்குத் திரும்பியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதான நீர் தாங்கிக்கு கோண்டாவில் நீர் விநியோகிக்கும் நிலையத்திலிருந்து விநியோகிக்கும் குழாய் உடைந்ததால் நீர் விநியோகம் தடைப்பட்டிருந்தது.

மாநகர சபை அதிகாரிகள், பொருத்துநர்கள், தொழிலாளிகள் உட்பட 30 பேரைக் கொண்ட குழு திருத்த வேலைகளை மேற்கொண்டது. இந்த வேலைகள் முடிவடைந்ததையடுத்து வெள்ளி மாலை முதல் நீர் விநியோகம் ஆரம்ப மாகியுள்ளது என மாநகர சபை நீர் வேலை பகுதி அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாண

## இருதரப்புகளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியில் - முல்லைத்தீவில் - போர்ப் பிரதேசத்தில் சிக்குண்டுள்ள மக்களை அமெரிக்கப் பசுபிக் கட்டளை அணியின் (PACOM) உதவியுடன் வெளியேற்றி இலங்கை அரசிடம் ஒப்படைக்கும் திட்டம் தீட்டப்பட்டிருப்பதாக செய்திகள் வெளிவந்தது தெரிந்ததே.

துணைச் செயலாளர் றிச்சர்ட் பவுச்சர் நேற்று நடத்திய தொலைபேசியூடான செய்தியாளர் மாநாட்டில் மேற்படி விடயம் குறித்து கேட்கப்பட்டது. அப்போதே அவர் அத்தகைய ஒரு செயற்பாட்டிற்கு அனுமதியளிக்கும் சூழல் ஒன்று உருவாகும் வரை மக்களை அப்புறப்படுத்தும் விடயத்தில் அமெரிக்கா ஈடுபட முடியாது என்று சொன்னார்.

சிக்குண்டுள்ள பொதுமக்களை முன்னர் குறிப்பிட்ட திட்டத்தின் பிரகாரம் வெளியேற்றுவதற்கு இரண்டு தரப்புக்களும் அனுமதிக்க வேண்டும் - என்றும் றிச்சர்ட் பவுச்சர் குறிப்பிட்டுக் கூறினார்.

வன்னியில் உள்ள நிலைமை குறித்து ஆராய்ந்து எந்தெந்த வகைகளில் அப்பகுதி மக்களுக்கு உதவ முடியும் என்ற சாத்தியக் கூறுகளை அடையாளம் காண எமது அதிகாரிகள் சிலரை அனுப்புகின்றோம். அப்பகுதியில் அவலப்படும் பொதுமக்களுக்கு என்னென்ன. செய்யமுடியுமோ அதைச் செய்ய முயல்வோம்- என்றும் துணைச் செயலாளர் கூறினார்.

இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு சம உரிமைகளை கொடுத்து அவர்களை கௌரவத்துடன் நடத்துவதற்கு ஏற்பாடு செய்வது அவசியம். இத்தகைய சூழ் நிலையில் விடுதலைப்புலிகள் பொது மக்களை தொடர்ந்தும் தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பது மக்களுக்கு அவஸ்தையையே கொடுக்கும் - என்றும் மேலும் தெரிவித்தார்.

(அ-1-06)

## உடனடியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றவடைதற்கும் உதவியாக இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் மோதல்களை இடைநிறுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தமது உறுப்பினர்களையும், ஆயுதங்களையும் மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து வெளியேற்றி, மனிதாபிமான முயற்சிகளுக்கு உதவுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார்.

இலங்கையின் மோதலுக்குக் காரணமாகவுள்ள விடயங்களுக்கு தீர்வு காண்பதற்கான தீவிர முயற்சிகளை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை பான் கீ-மூன் கோரியுள்ளார். (அ-சி)

## புதுமாத்தளனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெராட் நிலானி (வயது 26)ஆகியோரே உயிரிழந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

சடலங்கள் பருத்தித்துறை வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன. பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் சடலங் களை வைத்தியசாலையில் நேற்று மாலை பார்வையிட்டு, பிரேத பரிசோதனையின் பின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இச் சம்பவத்தில் காயமடைந்த மூவர் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(விவரமான செய்தி 2 ஆம் பக்கத்தில்)

(1-207-218)


நிலா வெளியீடு இணுவில்
1 ஆம் தவணைப் பரீட்சை
ஆரம்பம்: 07.03.2009
சனி 7.00 a.m
தரம் 01 முதல் O/L வரை
வினாத்தாள்கள் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்
N.C.B கல்வி நிலையம் இணுவில்
T.P No:-0776241573
0774691658

தமிழ்
A.K.கீர்த்திராஜன்
A/L 2010
பிரிவு - 11
ஆரம்பம்:
சனி-1PM
(ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்)
BRAIN POWER
குருநகர்

Diploma in English
★ Spoken with Grammar.
★ Phonetics Practices.
★ Computer Based Practices
★ Practice Exercises.
★ Spoken Practices.
★ Letter Writing.
★ Listening..
புதிய பிரிவுகள் ஆரம்பம் 09.03.2009 08.00AM
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில்,
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS
Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com


# பிள்ளையான் குழு தனது ஆயுதங்களை படையினரிடம் இன்று கையளிக்கும்

கொழும்பு, மார்ச் 7

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி (பிள்ளையான் குழு) தம் வசம் உள்ள ஆயுதங்களை அரசிடம் இன்று ஒப்படைக்கவுள்ளது என கட்சியின் ஊடகப் பேச்சாளர் அசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் அண்மையில் இடம்பெற்ற கட்சியின் உயர்பீட செயற்குழு கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது என அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது வசமுள்ள அனைத்து ஆயுதங்களையும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் மீனகம் காரியாலயத்தில் வைத்து அரசிடம் உத்தியோகபூர்வமாக கையளிப்போம். அரசு சார்பாக பாதுகாப்புத்தரப்பினர் கலந்துகொண்டு எமது ஆயுதங்களை கையேற்கவுள்ளனர்.

எமது கட்சியில் ஆயுதப் பிரிவுகளில் செயற்பட்டு வந்த உறுப்பினர்களின் விருப்பத்திற்கேற்ப அரச படைகளில் அவர்களைச் சேர்க்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் உள்ள ஏனைய சட்டவிரோதமான ஆயுதக் குழுக்களிடம் இருந்தும் விரைவில் ஆயுதங்கள் களையப்படும் என அரசு தமக்கு உறுதி அளித்துள்ளது - என்றார். (அ-சி)

## 40 மாதங்களில் கொல்லப்பட்ட, தாக்கப்பட்ட ஊடகவியலாளர் 54 பேர்

கொழும்பு, மார்ச் 7

இலங்கையில் கடந்த 40 மாத காலப் பகுதியில் 54 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டும் தாக்கப்பட்டுமுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் மீதான சம்பவங்கள் தொடர்பான குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறும் அவர் கோரியுள்ளார்.

மத்திய, வடமேல் மாகாணங்களில் வெற்றி பெற்ற ஐ.தே. கட்சி உறுப்பினர்களுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று அதன் தலைமையகமான ஸ்ரீ கொத்தாவில் இடம் பெற்ற போதே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவராக எஸ்.பி திஸநாயக்கவும், வடமேல் மாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவராக சமால் சனரத்தும் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டுள்ளனர். (அ-6)

## வன்னி மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்களை இந்தப் பாதைகளைப் பயன்படுத்தி வெளியேறுமாறு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்ன தெரிவித்துள்ளார்.

அந்த மக்களை அங்கிருந்து புறப்பட்டு அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருமாறு கோருவதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என மேலும் தெரிவித்துள்ள பாலித கோஹன்ன, விடுதலைப் புலிகள் மக்கள் நலனில் உண்மையான அக்கறை கொண்டிருந்தால் மக்கள் அங்கிருந்து வெளியேறுவதற்கு அவர்கள் அனுமதிக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

எனினும், அரசின் இந்த நடவடிக்கை தற்காலிக யுத்தநிறுத்தமல்ல என்றும் வலியுறுத்தியுள்ள அவர் படைத்தரப்பு இந்தப் பகுதிமீது ஷெல் வீச்சுகளை மேற்கொள்ளவில்லையெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் இந்த அறிவிப்பை அவதானத்துடன் வரவேற்றுள்ளது.

பொதுமக்களின் துயரங்களைக் குறைப்பதற்கான எந்த மேலதிக நடவடிக்கையும் வரவேற்கத்தக்கது என ஐக்கிய நாடுகளின் கொழும்பு அலுவலகப் பேச்சாளர் கோர்டென் வெய்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

மோதலில் சிக்கியுள்ள மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கான வழியாக இது அமைகின்றதா எனப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

## போர் நடைபெறும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தம் காரணமாக உருவாகியுள்ள அடக்குமுறை, மனித உரிமை மீறல்கள், தண்டனையிலிருந்து தப்பித்தல் போன்ற சகல பிரச்சினைகள் குறித்தும் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கையில் போர்ப் பிரதேசத்திலுள்ள பொதுமக்கள் பாதுகாக்கப்பட்டு, அவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என சிறிலங்கா அரசுக்கு ஐ.நா. தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருகிறது.

மனித உரிமைகள் தொடர்பான சிறிலங்கா அரசுக்கான அழுத்தங்கள், மனித உரிமைகள் சபை போன்று ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள ஏனைய நான்கு அமைப்புக்கள் ஊடாக தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் இடம்பெறும் நீண்ட காலப்போரில் இடம்பெறும் அரசியல் படுகொலைகள், கடத்தல்கள், காணாமல் போகச் செய்தல் போன்றவற்றுக்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

இலங்கையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் அலுவலகத்தைத் திறப்பதற்கு தாம் கோரிக்கை விடுத்துள்ள போதிலும், அதற்கான நாள் சிறிலங்கா அரசினால் இதுவரை இறுதி செய்யப்படவில்லை- என்றார். (அ)


பௌதிகவியல் மாதிரிப் பரீட்சை
விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு
முடிவுத் திகதி - 09.03.2009
NEC K.Selvan
Clock Tower Road, Jaffna


## புதன், வியாழக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் பகுதிகளில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை படையினர் ஆட்லறி, பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

இதில் 73 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 164 பேர் காயமடைந்துள்ளனர்.

அரசால் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட மாத்தளன், அம்பலன்பொக்கணை, வலைஞர்மடம் பகுதிகளில் வியாழனன்று அதிகாலை 1.30 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடையில் படையினர் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இதில் மட்டும் கைக்குழந்தை உட்பட 25 பேர் படுகொலை செய்யப்பட் டுள் ளதுடன் 123 இற்கும் அதிகமானோர் காய மடைந்துள்ளனர்.

அதிகாலை வேளை நடத்திப்பட்ட தாக்குதலினால் நித்திரையில் இருந்த மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் காயமடைந்த நிலையில் பெருமளவிளான மக்கள் இருளில் பெரும் அவலப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

பா. சஜந்தினி (வயது 07), சி. சாரூபன் (வயது 02), சோ. நடராசா (வயது 45).

ஆகியோரின் பெயர் விவரங்கள் மட்டும் கிடைக்கப்பெற்றன. 23 உடலங்கள் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

காயமடைந்தோரின் விவரம் வருமாறு:-

லோகேஸ்வரி (வயது 25), க.சுபாகர் (வயது 28), க.மணியம் (வயது 60), சு.முத்தையா (வயது 52), ஜெ.கலைவாணி (வயது 27), சி.தர்சினி (வயது 31), ந.இராசாத்தி (வயது 62), சு.அர்ச்சனா (வயது 09), சு.கணபதி (வயது 67), ஆ.சந்திரகுமார் (வயது 50), க.தங்கராஜா (வயது 53), செ.றோசினி (வயது 26), வே. மகேந்திரன் (வயது 31), அ.தீபராஜ் (வயது 25), பு.சுகந்தினி (வயது 26), அ.ஜீவரட்ணம் (வயது50), பெ.ரவிச்சந்திரன் (வயது 31), சி.றெபேகா (வயது 26), கை.ஞான சீலன் (வயது 24), து. முருகையா (வயது 31), ஜெ.மஞ்சுளா (வயது 20), க.ரவிச்சந்திரன் (வயது 39), கோ.சுகந்தினி (வயது 26), ஜெ.சுரேஸ்கோபி (வயது 07), த.லோறன்ஸ் (வயது 35), க.சிவபாக்கியம் (வயது 60), க.உதயநிர்மலா (வயது 36), க.யசோதா (வயது 21), பா.தர்சினி (வயது 17), இ.பாலசுப்பிரமணியம் (வயது 57), வி.சண்முகலிங்கம் (வயது 69), ப.ராஜ்குமார் (வயது 20), இ.பார்த்தீபன் (வயது 17), து.முருகா (வயது 37), க.சத்தியமூர்த்தி (வயது 39), செ.நாகேந்திரம் (வயது 52), க.றஞ்சிதம் (வயது 50), செ.கோமதி (வயது 32), செ.ஜீசா (வயது 10), ஆ.ராஜ்குமார் (வயது 44), தி.சந்திரபாஸ் (வயது 45), க.குமாரசாமி (வயது 63), கி.தனுசன் (வயது 14), மி.அசோக்குமார் (வயது 19), ம.மேரிலிப்பிஸ் (வயது 50), பா.இந்திராகாந்தி (வயது 44), வர்.கிருஸ்ணபிள்ளை (வயது 58), சி.புவேந்தினி (வயது 12), சீ.நல்லதேவி (வயது 55), ஜொ.ரவீந்திரவதனி (வயது 47), அ.ஜோன் (வயது 39), க.நாகராசா (வயது 54), க.லிங்கேஸ்வரி (வயது 29), கே.கலைச்செல்வி (வயது 26), மு.கலைரூபன் (வயது 24), க.மகேஸ்வரன் (வயது 38), க.நிருசா (வயது 25), சி.சீவரத்தினம் (வயது 50), தே.ஜீவலதா (வயது 31), சி.சிவஞானம் (வயது 50), க.குஞ்சுப்பிள்ளை (வயது 60), அ.கேதீஸ்வரன் (வயது 30), சி.சிவகீதன் (வயது 23), சு.மாலினி (வயது 27), செ.விஜயகுமார் (வயது 44), வ.மரியாயி (வயது 50), அ.சண் முகதேவி (வயது 52), வே.கண்ணம்மா (வயது 57), சு.அருட்பிரகாசம் (வயது 56), ச.சுப்பையா (வயது 90), சு.தர்மலிங்கம் (வயது 38), சி.கோமதி (வயது 31), மா.செல்வநாயகம் (வயது 48), சி.பிரதீபன் (வயது 22), இ.சுரேஸ் (வயது 38), அ.அனுசாந்தகுமார் (வயது 29), ந.ஐங்கீதன் (வயது 16), பெ.நாகம்மா (வயது 34), இ.சிறிதா (வயது 02), இ.ரவீந்தினி (வயது 19), சி.தங்கராசா (வயது 68), அ.பரஞ்சோதி (வயது 30), ஜெ.நாவேந்தன் (வயது 01), ஜெ.இராஜேஸ்வரி (வயது 19), பெ.ரஜனி (வயது 22), த.தஸ்வினி (வயது 19), த.தவப்பிரியா (வயது 12), செ.சுபிதா (வயது 13), து.இந்திரதாஸ் (வயது 31), சி.கந்தசாமி (வயது 55), கு.விஜயரூபன் (வயது 41), து.திரேசம்மா (வயது 40), சி.மேரி (வயது 60), க.அகிலன் (வயது 34), க.மகேஸ்வரன் (வயது 38), கு.றெஜினா (வயது 57), க.சுபாசினி (வயது 25), பெ.சத்தியா (வயது 15), சி.தெய்வானைப்பிள்ளை (வயது 62) செ.விஜயகுமார் (வயது 44), அ.மரியாயி (வயது 50), அ.சண்முகதேவி (வயது 52)-

காயமடைந்த ஏனையோரின் பெயர் விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள இரட்டைவாய்க்கால்ப் பகுதியை நோக்கி கடந்த புதன்கிழமை இரவு 7:45 மணிக்கு படையினர் ஆட்லெறி ஷெல், பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

இதில் 10 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 62 பேர் காயமடைந்துள்ளனர்.

மு.கிருஸ்ணகுமார் (வயது 56), உ.மாணிக்கம் (வயது 49), இ.இராசமணி (வயது 55), இ.அருந்தவராசா (வயது 40), ஜெ.தமிழ்வாணி (வயது 01), இ. ஞானமணி , ச.சாரங்கன் (வயது 18) ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஏனையோரின் பெயர் விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை.

காயமடைந்தோர் விவரம் வருமாறு:-

சி.புஸ்பராணி (வயது 35), த.ரகுராசா (வயது 20), செ.அருள்மதி (வயது 30) , இ.கணேசன் (வயது 24), ப.வினாயகமூர்த்தி (வயது 30), ச.வள்ளிமயில் (வயது 50), மு.சுந்தராம்பாள் (வயது 68), கு.வேலு (வயது 60), ஜெ.சாரூபன் (வயது 03), தெய்வானை (வயது 63), பொ.அருந்தவமலர் (வயது 53), செஇராஜநாயகம் (வயமு 57), கு.நடராசா (வயது 53), செ.ராதிகா (வயது 16), செ.கணேசானந்தராசா (வயது 57), வ.சிவசுப்பிரமணியம் (வயது 72), சி.கந்தசாமி (வய 49), கு.கபிலன் (வயது 25), நா.கிருஸ்ணன் (வயது 60), த.சுரேஸ் (வயது 34), சு.அஜித்குமார் (வயது 12), அகவை ச.மிதுசன் (வயது மூன்றரை), ச.லக்சுமி (வயது 22), பொ.நந்தகுமார் (வயது 32), ந.சந்திரவதனி (வயது 34), ந.விதுசா (வயது 04), ந.வேணுசன் (வயது 04), ஏகாம்பரம் செல்வராசா (வயது 51), கு.சின்னப்பா (வயது 70), வி.செல்லக்குமாரி (வயது 33), க.மணியம் (வயது 32), சி.சுதர்சன் (வயது 20), ஜெ.கமலேஸ்வரி (வயது 49), சு.சர்வேஸ்வரன் (வயது 49), ர.நிரோஜன் (வயது 14), பொ.கமலநாதன் (வயது 52), கி.சிவலோகநாதன் (வயது 56), த.துவிசன் (வயது 07), த.லூட்ஸ்மெபோதா (வயது 27), இ.ஆறுமுகம் (வயது 59), யோ.நிசாந்தன் (வயது 13), சி.கௌரி (வயது 42), மு.பிரதீபன் (வயது 18), க.ஜெயக்குமார் (வயது 38), செ.இராசநாயகம் (வயது 51), கர்ப்பிணியான பி.சிவதர்சினி (வயது 24), யே.சுரேஸ் (வயது 30), பி.புருசோத்தமன் (வயது 14), பொ.துரைசிங்கம் (வயது 70), சி.ஜெயசீலன் (வயது 30), இ.அற்புதராசா (வயது 45), ஆ.அன்னப்பிள்ளை (வயது 85), க.மணியம் (வயது 52), அ.தெய்வானை (வயது 53), அ.ஐயம்பிள்ளை (வயது 65), வ.சாஜகான் (வயது 19), செ.ராதிகா (வயது 14), ஜெ.விஜிதா (வயது 30), ரா.சரஸ்வதி (வயது 57)

ஆகியோர் காயமடைந்துள்ளனர். ஏனையோரின் பெயர் விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை. (அ-1)

## புத்தகசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்தார்கள் என பொலிஸார் தெரிவித்தனர். வெள்ளவத்தையில் வசித்து வரும் அவர்களிடமிருந்து சம்பந்தப்பட்ட சஞ்சிகை பெரும் எண்ணிக்கையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

நீதிமன்ற தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் இவர்கள் இருவரும் கல்கிசை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக் கப்பட்டு விசாரணை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## ஏவுகணைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரி வித்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

இந்த ஏவுகணைகள் எப்போது யாரால் எந்த இலக்குக்குப் பயன்படுத்தப்பட்டன போன்ற தகவல்கள் அந்து வெற்றுக் கூடுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.

இதன்படி 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் திகதி முதலாவது ஏவுகணை இராணுவத்துக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கடைசியாக 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வகையான இரு ஏவுகணைகளை அண்மையில் கிழக்கில் தொப்பிகலைப் பிரதேசத்திலும் படையினர் கண்டுபிடித்தனர் - என்றார். (அ-சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org